Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 26 திங்கட்கிழமை (10.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 160

### ஊஞ்சல் கயிறு இறுகி சிறுமி உயிரிழப்பு

(மன்னார்)

ஊஞ்சல் கயிறு இறுகி சிறுமி ஒருத்தி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பபவம் ஒன்று மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் பன்னவட்டுவான் பகுதியைச் சேர்ந்த ரூபசிங்கம் சஜிதா (வயது-14) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

வீட்டில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் இச்சிறுமி விளையாடிக் கொண்டிருந்தபோது, ஊஞ்சல் கயிறு தற்செயலாக இவரின் கழுத்தில் இறுகியதாகவும் இந்நி[illegible]லயில், இவர் வைத்தியசா[illegible]க்கு கொண்டு

(19) ஆம் பககம் பார்க்க...

# தமிழர் பிரச்சினையைத் தீர்க்காமல் அரசியல் நடத்துகிறது கூட்டமைப்பு



## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது பிரச்சினையைத் தீராப்பிரச்சினையாக வைத்துக் கொண்டு அதன் மூலம் தமது அரசியலைத் தொடர்வதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மத்திய பேருந்து நிலையத்தின் உப அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற நிலையப் பணியாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் பிரச்சினை தொடர்பில் உரிய தீர்வு காண்பதற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க...

# இராணுவ நலன்களை அடைய அழுத்தம் செலுத்தும் அமெரிக்கா



## தூதுவர் தமரா குணநாயகம் குற்றச்சாட்டு

இலங்கையில் தனது இராணுவ நலன்களை அடைவதற்காகவே, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்ற போர் வையில் அமெரிக்கா அழுத் தங்களைக் கொடுத்து வருவதாக, ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆசியாவில் காலூன் றுவதற்கு அமெரிக்காவுக்கு ஒரு மூலோபாய கேந்திரம் தேவைப் படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அனைத்துலக விசாரணைகளை ஊக்குவிக்கும் தீர்மானத்தை, இலங்கையில் பிராந்திய தளம் ஒன்றை அமைக்க அமெரிக்கா பயன்படுத்தவுள்ளது.

இது தென்சூடான் போன்று இலங்கையும் பிரிக்கப்படுவதற்கு வழிகோலப் போகிறது.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதில் அமெரிக்கா உண்மையான அக்கறையைக் கொண்டிருக்கவில்லை.

வேகமாக வளர்ந்து வரும் இந்தப் பிராந்தியத்தில் அதற்கு ஒரு தளம் தேவைப்படுகிறது.

சீன - இந்திய அணியை தடுப்பதற்கு ஒரு கேந்திரமையம் தேவைப்படுகிறது.

இது தான் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் 2012 கொள்கையின் அடிப்படை.

ஐ.நா. உயர்ஆணையரால் விசாரணை நடத்தக் கோருகிறது இந்த தீர்மானம்.

இதன் அர்த்தம், அனைத்துலக விசாரணை என்பதே.

ஐ.நா. உயர் ஆணையர்

(19) ஆம் பக்கம் பார்க்க...

### மதில் சுவர் வீழ்ந்து பாலகன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

புகையிரதப் பாதை அமைக்கும் பணிகளைப் பார்த்துக் கொண்டிருந்த 3 வயதுப் பாலகன் மீது மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் அதனுள் அகப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

நாவற்குழி வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த ஜெயசுகிர்தன் ஜெயடினோஜன் (வயது-3) என்ற பாலகனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவனாவான்.

நேற்று நண்பகல் 12.00

(19) ஆம் பக்க்ம் பார்க்க...

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் இன்றும் கலந்துரையாடல்

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக கொண்டு வரவுள்ள தீர்மானம் தொடர்பாக இன்றைய தினமும் ஜெனிவாவில் முறைசாரா கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் ஒரு அங்கமாக, பக்க நிகழ்வுகளும் அங்கு இடம்பெற்று வருகின்றன.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள அமெரிக்கா, பிரித்தானியா, மொன்ரனிக்ரோ, மொறிசியஸ், மசிடோனியா ஆகிய நாடுகள் சார்பில், கடந்த வெள்ளிக்கிழமை ஒரு பகிரங்க முறைசாரா விவாதம் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்கும் நாடுகளும் இலங்கைக்கு ஆதரவான நாடுகளும் பல்வேறு அனைத்துலக அமைப்புகளும் கலந்து கொண்டிருந்தன.

தீர்மான வரைவில் இடம் பெற்றுள்ள வாசகங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

கனடா, பிரித்தானியா, மற்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## மானிப்பாயில் தீ; 3 கடைகள் நாசம்

(யாழ்.நிருபர்)

மானிப்பாயில் நேற்று இரவு இடம்பெற்ற தீ விபத்தில் மூன்று கடைகள் எரிந்து சாம்பராகியுள்ளன.

நேற்று இரவு 8.30 மணியளவில் இத்தீவிபத்து ஏற்பட்டதாகவும், உடனடியாக யாழ்.மாநகர சபை தீயணைப்பு பிரிவுக்கு வழங்கப் பட்ட தகவலின் படி அங்கு சென்ற தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மூன்று கடைகளும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. தையலகம் ஒன்றில்

(19) ஆம் பக்கம் பார்க்க...



## ஜெனிவா தீர்மானம் குறித்து தேவையேற்பட்டால் பேச்சு

### இந்தியா தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்துள்ள அமெரிக்காவுடன், தேவை ஏற்பட்டால், இந்தியா பேச்சு நடத்தும் என்று இந்திய வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன், இதுபற்றித் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்காவின் தீர்மான வரைவு மூன்று நாட்களுக்கு முன்னர் ஜெனிவாவில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க...

### கிளிநொச்சி தருமபுரத்தில் யானை தாக்கி மாணவன் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்று யானை தாக்கிய தில் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் உயிரிழந்ததுடன், வயோதிபர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

முரசுமோட்டையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியும் கஜானன்

(19) ஆம் பக்கம் பார்க்க...

உள்ளே

க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட அலகு ரீதியான பயிற்சி வினாத்தாள் மற்றும் தமிழ் இலக்கணத் தொகுப்பு

## யுத்தக் குற்றச்செயல் விசாரணை தீர்மானிக்க முடியாது ஐ.நா.




யுத்தக் குற்றச் செயல் விசாரணைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பு தீர்மானிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பங்கேற்று உரை[illegible]

(19) ஆம் பக்கம் பார்க்க...

06



தெற்கில்

08



# கல்வி அபிவிருத்தி மாநாட்டுக்கு யாழ்.வலயத்திலிருந்து ஐந்து அதிபர்கள்

(திருநெல்வேலி)

வடமாகாண கல்வி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு சம்பந்தமாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்திலிருந்து ஐந்து அதிபர்கள் தெரிவாகியுள்ளனர்.

தேசிய பாடசாலைக்கு வீ. கணேசராஜா, 1 ஏபிக்கு வணக்கத்துக்குரிய ஜெரோம், 1 சீ பாடசாலைக்கு திருமதி மகேஸ்வரன் வகை II இற்கு கு.திலீபன், வகை III இற்கு எஸ். கோகுலராகவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக ஐந்து வகைப் பாடசாலைகளிலிருந்தும் தலா ஒரு அதிபரைத் தெரிவு செய்து அவர்களின் பெயர் விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரைக் கேட்டிருந்தார்.

இம்மாநாடு தொடர்பான விளக்கக் கலந்துரையாடலும், அவர்களிடமிருந்து கல்வி ஆலோசனைகள் பரிமாற்றமும் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களை பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (137)

## பாதுகாப்பற்ற முறையில் வரணி பொதுச் சந்தை

(வரணி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வரணிப் பொதுச் சந்தை பாதுகாப்பற்ற முறையில் உள்ளது.

இச்சந்தை வாயிற்கதவு இல்லாததால் கட்டாக்காலிகள் இரவு வேளைகளில் படுத்துறங்குமிடமாக மாறிவருகின்றது.

இதனால் தாம் பெரும் இன்னல்களுக்கு ஆளாவதாக வியாபாரிகளிடையே கருத்து நிலவுகின்றது.

எனவே வரணிப் பொதுச் சந்தைக்கு பாதுகாப்பான முறையில் கதவு இட்டு புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (150)

## நல்லொழுக்க நிறுவனத்தின் பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் பா.ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ரேணுகா கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வன்னியிலிருந்து வந்த பெண்ணுக்கு முச்சக்கர வண்டி வழங்கப்படவுள்ளதுடன், புதிய நிர்வாகத்தெரிவும் இடம் பெறவுள்ளது. (109)


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

தனி ஒரு பெரிய குடும்பத்திற்கு பாவிக்கக்கூடிய அல்லது அக்கட்டடத்தை இரு சிறு வீடுகளாக்கக்கூடிய கட்டமொன்று சுதுமலை தெற்கில், விற்பனைக் குண்டு.

தொடர்பு: கே.சீவறட்ணம் சிவராசா, சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு (ஏகாம்பரம் கடையடி).

(R/342)


## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

வடபிராந்திய சிகை ஒப்பனையாளர் சங்க பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத்தெரிவும் நாளை இடம்பெறவுள்ளது. சுன்னாகம் வர்த்தகசங்க மேல் மாடியில் காலை 9.30 மணிக்கு சுன்னாக நிலையத்தலைவர் பகிரதன் தலைமையில் இப்பொதுக்கூட்டம் இடம் பெறுகின்றது.

இதில் ஒன்றியத்தலைவர் கி.இரத்தினராசா, ஒன்றியச் செயலாளர் ஞா.சுரேந்தர், ஒன்றிய போசகர் க.நாகராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். நாளை பொதுக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2511 திகதி 08-03-2014

ஆங்கில எழுத்து: N

வெற்றி எண்கள்: 09 28 32 34

போனஸ் இல: 37

ஜக்பொட் பரிசு ரூ.20,219,325/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 207681 | 20/- | 4,153,620/- |
| 2 இல | 14894 | 100/- | 1,489,400/- |
| 3 இல | 318 | 1,000/- | 318,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8585 | 40/- | 343,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 619 | 1,000/- | 619,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,219,325/- | - |
| 1 இல + போனஸ் இல | 9876 | 100/- | 987,600/- |
| 2 இல + போனஸ் இல | 458 | 500/- | 229,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 398 | 200/- | 79,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 242871 | | 10,008,120/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014 மார்ச் 12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ.20,787,275/-

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3355)


## கவிதை நூல் வெளியீடு

வள்ளுவர்புரம் யோ.புரட்சி எழுதிய 'எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும்' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணிக்கு முல்லைத் தீவில் இடம்பெறவுள்ளது.

அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் தலைமையில் படகுகள் சகிதம் முல்லைத்தீவு கடலில் வைத்து இந்நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது. (10)

# வடமாகாண முதலமைச்சருக்கு ஓர் பகிரங்க மடல்!

கடந்த 5.3.2014 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜப்பானியத் தூதுவரிடம் வடமாகாண சபை அதிகாரிகள் போக்குவரத்துச் செய்வதற்கு வாகனங்கள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுவதாக வடமாகாண முதலமைச்சர் எடுத்துரைத்துள்ளார். தான் இவ்வாறு ஜப்பானியத் தூதுவரிடம் கூறியதாக முதலமைச்சர் ஊடகவியலாளர்களிடம் கூறியது தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

ஐயா முதலமைச்சர் அவர்களே!. அரசாங்க அதிகாரிகளுக்கு வாகனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காகவா வடமாகாணத் தமிழர்கள் உங்களை முதலமைச்சராகத் தெரிவு செய்தார்கள்?

அரசாங்க அதிகாரிகளுக்கு அரசாங்கம் சம்பளம் மாதாமாதம் ஒழுங்காக வழங்குகிறது அல்லவா? யாராவது ஒரு அரசாங்க உத்தியோகத்தர் தனக்கு உரிய திகதியில் சம்பளம் கிடைக்கவில்லையென யாருக்காவது முறைப்பாடு செய்துள்ளாரா? அதிகாரிகள் வாகனங்களில் போய்த்தான் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையில் எங்காவது கூறப்பட்டுள்ளதா?

ஐயா முதலமைச்சர் அவர்களே!. யாழ்ப்பாண கச்சேரியில் 1905 ஆம் ஆண்டு கடேற் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய பிரபல எழுத்தாளர் லியனார்ட் வூல்ப் மிதிவண்டியில் தான் யாழ்ப்பாணம் முழுவதும் பிரயாணம் செய்தார்.

அவருடைய நாட்குறிப்பிலிருந்து உதாரணத்திற்கு ஒரு வரி:

ஏப்ரல் 9. 1905

I am dead tired having bicycled about 35 miles.
Growing an auto biography of the years 1904 - 1911
By Leonard woolf (பக் - 57)

யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வடமாகாணசபை மூலம் தங்களுக்கு ஏதாவது துளியாவது உதவி கிடைக்குமென எதிர்பார்த்துத்தான் உங்களுக்கு வாக்களித்தார்களே தவிர அரசாங்க அதிகாரிகளுக்கு வாகனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கல்ல.

யுத்தத்தில் அவயவங்களை இழந்த மாற்றுத் திறனாளிகள் பற்றியோ அல்லது கணவனை இழந்து பரிதவிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பற்றியோ இதுவரை மாகாண சபை உறுப்பினர்கள் யாரும் வாய் திறந்ததாகத் தெரியவில்லை. ஆளுநரை மாற்ற வேண்டும். பிரதம செயலாளரை மாற்றவேண்டும என்று மட்டும் ஊடகங்களுக்குப் பேட்டியளித்து வருகிறீர்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் பேணும் அமைப்பு என ஒரு அமைப்பை ஏன் வடமாகாணசபை உருவாக்க முயற்சிக்கவில்லை. அல்லது அது பற்றிச் சிந்திக்கவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடமாகாண சபை எதுவித உதவிகளும் செய்யக்கூடாது என இலங்கை அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா?.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஒன்பதாம் அட்டவணையின் ஏழாவது பிரிவான சமூக சேவைகளும் புனர்வாழ்வளித்தலும் என்ற விடயத்தின் கீழ் புனர்வாழ்வு மாகாணசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை மாகாண சபைகள் மத்திய அரசாங்கத்தினூடாக வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும். பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் கூறுகிறது.

நான் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் தமிழ்மொழி பெயர்ப்பைத்தான் பார்த்தேன். ஆங்கிலத்தில் இந்த விடயம் உள்ளதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

ஐயா முதலமைச்சர் அவர்களே! யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உங்களிடம் (வடமாகாண சபையிடம்) எதிர்பார்ப்பது தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான வாழ்வாதார உதவிகளையே. வடமாகாண சபை புனர்வாழ்வுக் குழு என்ற பெயரில் ஒரு புனர்வாழ்வுக் குழுவை உருவாக்குவதற்கு ஏன் வடமாகாண சபை முயற்சி எடுக்கக்கூடாது. வடமாகாண புனர்வாழ்வுக்குழு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கு எவ்வளவு பணம் தேவை என மதிப்பீடு செய்து வெளிநாடுகளிடமோ. புலம்பெயர் தமிழர்களிடமோ உதவி கோரினால் இலங்கை அரசாங்கம் அதனைத் தடுத்து நிறுத்தப் போகிறதா?

ஆக்கபூர்வமாகச் சிந்தியுங்கள்... செயற்படுங்கள்.

இப்படிக்கு.
ந.பரமேஸ்வரன்.

# படித்துப் பட்டம் பெற்றால் போதாது மானிடம் தழைக்க பணியாற்றவேண்டும்

## பேராசிரியர் சிவநாதன் தகவல்

(யாழ்ப்பாணம்)

படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் போதாது, பட்டங்கள் பெற்றதன் பின் சமூகத்திற்கும் மானிடம் தழைப் பதற்கும் மகத்தான பணியாற்றவேண்டும். இதன் அடிப்படையில் தேவானந் ஐந்துக்கும் மேற்பட்ட உயர்பட்டங்களைப் பெற்றுள் ளார். அவரது அனுபவப் படைப்பே 'செய்தி' 'செவ்வி' என்னும் இரண்டு நூல்களாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகவியல் கற்கைநெறி விரிவுரை யாளரும், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளரு மாகிய தேவானந் எழுதிய 'செய்தி' மற்றும் 'செவ்வி' என்னும் இரண்டு நூல் களின் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டு உரை நிகழத்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவ நாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்லைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பயிற்றுவிப்பாளர் ஆர். சபேசன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது,

ஊடகவியலாளர்களின் பணி காத் திரமானது, அபாயகரமானது காய்தல் உவத்தல் இன்றி பக்கம் சாராது நடுநிலை நின்று பணியாற்ற வேண்டியவர்கள் ஊடகவியலாளர்கள்.

பொய், புரட்டு, ஊழல் மிகுந்த உலகில் செவ்வி காணவரும் ஊடகவியலாளர் களைக் கண்டு ஓட்டம் எடுக்கும் நிலையில் பலர் இருக்கிறார்கள். சிலர் ஊடகவி யலாளரின் உயிரையே எடுக்குமளவிற்கு துணிந்து விடுகிறார்கள்.

உயிராபத்து நிறைந்த ஊடகத்துறை யில் பணியாற்றுபவர்கள் போற்றுதற் குரியவர்கள். ஊடகக் கற்கை நெறியினைப் பயின்றால் வாழ்க்கையில் முழு மனித னாக விளங்க முடியும். யாழ். பல்கலைக் கழகத்தின் அங்கமாக விளங்கும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் சிறநத முறையில் அச்சு மற்றும் இலத்தி ரனியல் ஊடகங்களில் பணிபுரிவதற்கேற்ற வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

தேவானந் எழுதிய செய்தி மற்றும் செவ்வி ஆகிய இரண்டு நூல்களையும் பேராசிரியர் வி.பி.சிவநாதன் வெளியிட்டு வைக்க மூத்த புகைப்பட ஊடகவியலாளர் சங்கரகம்பர் கதிரவேலு முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். ஊடகக்கல்வி மாண வர்களுக்கு பிரதிகள் இலவசமாக வழங்கப பட்டன. (10)

# கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு



(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரனின் (வி.கே.ஜெகன்) வழிகாட்டலில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பத்துப் பாடசாலை மாணவர் களுக்கு யாழ். பிரதேச அபிவிருத்தி வங்கியில் கடந்த வியாழக்கிழமை சேமிப்புக் கணக்கில் பணம் வைப்பி லிடப்பட்டது.

இதற்கான நிதியினை பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த வி.பிர போத என்பவர் வி.கே.ஜெகனிடம் கையளித்துள்ளார்.

இதில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களை தெரிவு செய்து வங்கியில்பணம் வைப்பிலிடப்பட்டதுடன் மாதாந்தம் அச்சிறார்களின் சேமிப்புக் கணக்கில் இருநூறு ரூபா வைப்பிலிடப் படவுள்ளது.

இக்கிளையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2012.05.26 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார். அன்றிலிருந்து இன்றுவரை எமது யாழ் கிளையில் மொத்தம் பதினாறாயிரம் வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

அதில் மூவாயிரத்து ஐந்நூறு வாடிக் கையாளர்களுக்கு நாம் கடன் வசதிகள் வழங்கியுள்ளோம். தற்போது வடக்கில் மட்டும் ஆறு கிளைகள் உள்ளன.

இன்று வங்கியில் பணம் வைப்பிலிட்ட இச்சிறார்கள் புலமைப்பரீட்சையில் சித்திய டைந்தால் அவர்களுக்கு விஷேட பரிசில் களும் உண்டு. இதனை ஒருங்கமைத்து தந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னராகிய வி.கே.ஜெகனுக்கு எமது வங்கி யின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என பிரபோத தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வங்கி பிரதி முகாமை யாளர் எஸ்.சுரேஸ், வங்கி நிர்வாக உத்தியோகத்தர்களான திருமதி.விஜிதா சுதர்சன், செல்வி.எஸ்.கற்சலா, செல்வி.எஸ். எம்.ஜனனி ஆகியோர் வங்கியின் சார்பில் சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கினார்கள்.

# ஆயுர்வேத வைத்தியசாலை இளவாலையில் திறப்பு

இளவாலை வாலிபர் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க வலி.வடக்கு பிரதேச சபையினரால் ஆயுர்வேத வைத் தியசாலை ஒன்று இளவாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபைக்கு ஆயுர் வேத வைத்திய சாலையின் தேவையை உணர்த்தி இளவாலை கிராமத்திலே இவ் ஆயுர்வேத வைத்தியசாலை அமைத்து தருமாறு வேண்டுகோள் விடுத்து ஊர் மக்களின் கையொப்பங்களுடன் கடிதம் ஒன்று சட்ட பூர்வமாக அனுப்பி வைக்கப் பட்டது.

வலி.வடக்கு பிரதேசசபை உறுப் பினர் வே.சண்முகநாதனின் உழைப்பி னாலும் கிராமத்தில் ஆயுர்வேத அரச வைத்திய சேவை வழங்க வலி.வடக்கு பிரதேச சபை முன் வந்தது.

அதற்கமைய இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் ஆயுர் வேத வைத்தியசாலை கடந்த வெள்ளிக் கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர் வே.சண்முகநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த வைத்திய சேவை திங்கள், புதன் , வெள்ளி ஆகிய கிழமைகளில் தனது சேவையை வழங்க உள்ளது.

இக் கட்டடத்தில் தற்காலிகமாக ஆரம் பித்து வைக்கபட்டிருக்கின்ற போதிலும் வெகு விரைவில் இதற்கான கட்டடம் நிறுவப்பட்டு அதில் வைத்தியசாலை இயங்கவுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (48)

# பிழைப்பு, பதவி என்று வந்து விட்டால்..

வடபுலத்தான் எழுதுவது...

'அம்மா நீங்கள் நினைச்சீங்கன்னா 40 சீட்டையும் நாமே எடுத்துக்கலாம். எப்புழயாவது அவுங்க மூணுபேரை யும் வெளியில வுட்டுடுங்க. அது ஓங்களாலதான் முழயும். அப்புழயே கலைஞ்ஞர கவுத்திடலாம்... மத்திய அரசாவது மண்ணாங்கட்டியாவது... பேரறிவாளன் வெளியில வந்திட்டார்ன்னா... அவன்ட அம்மா அற்புதம் அம்மாவை வைச்சே நாம ஜெயிச்சிடலாம்... நீங்க ஒரு மகா சக்தி... ஒண்ணுக்குமே யோசிக்காம எதையாவது பண்ணி, எப்புழயாவது அவங்கள வெளியில கொண்டாந்திடுங்க... 40 சீட்டு... சொளையாக் கெடைச்சிருக்கு...'

இது ஜெயலலிதாவுக்கு அவருடைய விசுவாசிகள் விடுத்துவரும் கோரிக்கை.

'தலைவரெ... அந்த அம்மா அவுங்க மூணுபேரையும் (பேரறிவாளன், முருகன், சாந்தன்) உட்டுட்டா... அப்புறம் நம்ம கதை கந்தல்தான். 40 சீட்டுல ஒண்டு கூட நமக்குக்கிட்டாது... பேசாமத் துண்டத் தூக்கி மூஞ்சியைப் போத்துக்க வேண்டியதான்... சட்டத்தையெல்லாம் பாத்துக்கிற நிலையில ஜனங்க இல்ல. பேரறிவாளனோட மத்தவங்களும் வெளியில வந்துட்டா.. அம்புட்டுத்தான்.... அப்புறம் அ.தி.மு.க வுக்கு அள்ளிப்போட்டுடுவாங்க.. அதனால சொல்றேன்... அவுங்கள வெளி யில வர வுடாம நாம பாத்துக்கணும்னு. அது ஓங்களாலதான் முழயும் தலைவரே.. நீங்க நெனெச்சா எதுதான் நடக்காது. காங்கிரஸ்காரன வைச்சே–அந்தம்மா சோனியாவ வச்சே அவங்கள வெளியில வரவுடாமப் பாத்துக்கங்க... மறுபழயும் சொல்றேன்... அவுங்க வெளியில வந்திட்டா நம்ம கதை அம்போதான்...'

இது கருணாநிதியின் இடத்தில் அவருடைய ஆட்கள் சொல்லி வருகின்ற அறிவுரை.

'அண்ணாச்சி, இதான் நம்மளுக்கு வாய்ச்சிருக்கிற ஒரே வாய்ப்பு. இதுலயும் நம்ம கைய வுட்டுட்டோம்னா அம்புட்டுத்தான். நமக்கு வேற வழியே கெடயாது. பேரறிவாளன் வெளியில வந்திட்டா அந்தப் புள்ள எப்பிழயும் நம்மளோடதான் நிப்பான். அவனோட நீங்க ரொம்பப் பிரியம்னு அவனுக்கும் அந்தம்மா அற்புதம்மாளுக்கும் தெரியும். அதனால தான் சொல்றோம். நீங்க எப்புழயாவது ஜெயலலிதாம்மாவப் புழச்சி அவுங்க மூணுபேரயும் வெளில கொண்டாந்துடுங்க... அவுங்களக் கொண்டாந்துட்டா, அத வெச்சே நாம கட்சியை வளர்த்துடலாம். இது நல்ல ஒரு வாய்ப்பு அண்ணாச்சி. இவ்வளவு நாள் இந்த ஜெயலலிதாவோட நாம கெடந்து காஞ்சதுக்கு இது ஒண்ணாவது உருப்பழயா வரட்டும். கைய விட்டுடாதீங்க அண்ணாச்சி....'

இது வைகோவின் தொண்டர்கள் அவரிடம் விடுத்து வருகின்ற கோரிக்கையும் செய்கின்ற அறிவுரையும்.

'தம்பீ... அந்தக் கொலகாரப் பயல்களை வெச்சிருந்தாலும் நம்மளுக்குத் தொல்லதான். அவுங்கள வுட்டாலும் நம்மளுக்கு ஆபத்துத்தான். பெரிய எழவாப் போச்சுப்பா... பேசாம அவுங்கள முன்னாழயே வுட்டுத் தொலைச்சிருந்தா... இல்லாட்டி உள்ளுக்க வெச்சே போட்டுத்தள்ளிருக்கலாம்... அப்டீன்னா இப்ப ஒரு தொந்தரவும் இல்ல. அவுங்கள வெச்சிருந்து, இப்ப இந்தத் தேர்தல் டைம்ல பாருங்க, எவ்ளவு தொல்லைன்னு.. அங்க பாருங்க.. சிலோன்ல பிரபாகரனயே இல்லாம ஆக்கீட்டாங்க... புலிகளே கெடயாது.. நாமதான் இந்த சனியன் தொல்லையை தொலைக்காம வெச்சிட்டிருக்கோம்.... காங்கிரசுக்கு தமிழகத்தில பெரிய எழப்பாத்தான் இவங்க பிரச்சினை இருக்கு.... இந்தா பாருங்க தம்பி, நீங்களும் கலைஞருமாச் சேந்து அந்தம்மா (சோனியா) கிட்ட ஒரேயழயாச் சொல்லிடுங்க... அவுங்க மூணுபேரை யும் இப்ப வுட்டீங்கன்னா, நம்ம கதை அம்புட்டுத்தான். படுத்துடும். ஆனா ஏழஎம்கே(அ.தி.மு.க) அத வெச்சே பொழைச்சுடும்... தலை சுத்துது தம்பீ...'

இது ஜீ.கே.வாசன் (தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்) வீட்டில் அவருடைய கட்சிக்காரர்கள் விடுத்து வரும் எச்சரிக்கை.

இப்படித்தானிருக்கிறது ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் சிறை யிருக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருடைய விடுதலை-யைப் பற்றி தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு கட்சியின் நிலைப்பாடுகளும்.

இதை விட பத்திரிகைள் வேறு எழுதிப் பிழைக்கின்றன.

பிழைப்பு என்று வந்து விட்டால் உயிரென்ன மசிரென்ன?

மக்கள் என்ற மந்தைகள்தான் பாவம். அவர்கள் மந்தைகளாகவே இருந்து கொண்டு மக்கள் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறார்கள்.

இல்லையென்றால், இந்த மாதிரி பம்மாத்துகளையும் சுத்துமாத்துகளையும் விளங்காமலே காலம் முழுவதும் இதையெல்லாம் நம்பிக்கொண்டிருப்பதை வேறு எப்படிக் கருதுவது?

மனிதர்கள் என்றால் அறிவோடு இருக்க வேணும். எதையும் ஆராய்ந்து பழக வேண்டும். உண்மைக்கும் பொய்க்கும் இடையில் வித்தியாசத்தைக் காணத் தெரிய வேண்டும். சொல்கிறவன் தான் பேய்த்தனமாகச் சொன்னாலும் கேட்பவன் கேணயனாக இருக்கக் கூடாது எண்டு சும்மாவா சொன்னார்கள்?

*மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு பலவீனமே மரணம்.* - *விவேகானந்தர்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.emurasu.com**

## அறிவு வரும் என்று நம்புவோம்!

இன்றைய இணையத்தள வளர்ச்சியோடு கருத்துச் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். சமூக வலைத்தளங்கள் இந்த அளவுக்கு வளர்ச்சி பெறும் என்றோ மக்களிடம் தவிர்க்க முடியாத அங்கமாக மாறும் என்று சில ஆண்டுகள் முன்புவரை யாரும் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது.

இன்றைய இணையத்தளங்கள், எதை வேண்டுமானாலும் கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்கின்ற அளவுக்குப் பரந்துபட்ட அறிவு மேடையாக இருக்கின்றன. அதேவேளையில், யார் கேட்டாலும், எந்தத் தகவலை வேண்டுமானாலும் கொடுக்கிறது என்பது பல அரசாங்கங்களுக்கு தலையிடியாகிவிட்டது.

எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் கருத்துகள் கொட்டப்படுகின்றன. ஒரு மதத்தைப் பற்றியோ அல்லது மதச் சடங்கைப் பற்றியோ ஃபேஸ்புக்கில் தெரிவிக்கப்படும் கருத்து, ஒரு தனிநபர் கருத்தாக இருக்கலாம். ஆனால், அது ஃபேஸ்புக் நண்பர்கள் மூலமாக அனைவருக்கும் பரப்பப்படும்போது அதனால் ஏற்படும் பின்விளைவுகள், மோதல்களை எதிர்கொள்ள வேண்டியது அரசும் நிர்வாகமும்தானே? என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் மக்களை ஜனநாயகமயப்படுத்துவதில் இணையம் பெரும்பங்கு வகிப்பதையும் அறிஞர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். பிறரை ஒட்டுக்கேட்கும் உலக வல்லரசை ஒரு தனிமனிதன் எதிர்க்கும் தைரியத்தை, அந்த ஆகப்பெரும் அதிகாரத்தை அம்பலப்படுத்தும் அற்புதத்தையும் இணையவெளி சாத்தியமாக்கியிருக்கிறது.

ஒட்டுக் கேட்கும் உளவுத் தகவல்களை வெளிக் கொணர்ந்த ஒரு தனி மனிதர், ஜனாதிபதி ஒபாமா அளவிற்கு, சக்திமிக்கவராகிறார். ஏனென்றால், இணையம் ஒட்டுக் கேட்பவர்களுக்குப் பயன்படுவது போலவே, அதை அம்பலப்படுத்துபவருக்கும் பயன்படுகிறது. அந்த நபர் நீங்களாக இருக்கலாம், எவராகவும் இருக்கலாம். இது ஒரு நவீன ஜனநாயகம்.

"உலகில் ஒரு புதிய சமநிலை தோன்றி உள்ளது. உலகின் மிகப் பெரிய சக்தி வாய்ந்த தலைவர்களுக்கு சவாலாக, ஒரு தனி மனிதன் வந்துள்ளான். ஒரு தனி மனிதனால் அதிகாரத்தை எதிர்த்துப் போராட முடிகின்றது. இந்தப் போக்கு, மேலதிக ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் கொண்டு வரும் என்று நம்புகின்றேன்." என்கிறார் பிரெஞ்ச் தத்துவவியலாளரான மிஷேல் செரெஸ்.

கணனி யுகமானது, அறிவுடைமையை ஜனநாயகமயப்படுத்துவதிலும், சமுதாயத்தை மாற்றுவதிலும் முக்கிய பங்காற்றியுள்ளது. உலகின் ஒரு மூலையில் உள்ள கிராமத்துத் தொழிலாளிக்கும் உலகம் முழுவதும் உள்ள தொழிலாளிகளுக்கும் நடைபெறுவது என்ன என்பது இன்று உடனுக்குடன் தெரிந்துவிடுகிறது; உலகப் பொருளாதார ஏற்ற இறக்கம் பற்றி தெரிந்திருக்கிறது.

இது ஜனநாயக உறவுகளில் மாற்றத்தைக் கொண்டு வரும். எமக்கு நல்லது எது, கெட்டது எது என்று கூறிக் கொண்டிருந்த அரசியல்வாதிகள். தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதையே வாசிக்க, கேட்க, பார்க்க வேண்டுமென்று எதிர்பார்த்த ஊடகங்கள். இவர்களின் காலம் போய் விட்டது என்றெல்லாம் சொல்கிறார் செரெஸ்.

ஊடகங்கள், தகவல்களை தேர்வுசெய்து வகைப்படுத்தி, நமக்குத் தருகின்றன. இணையத்தில் அப்படி இல்லை. நாமாகவே தெரிவு செய்ய முடியும். நமக்கு வேண்டிய தகவல்களை நாமே வகைப்படுத்தி பெற்றுக் கொள்ள முடியும். இப்படி நாமாகவே ஒரு தகவலை தேடி எடுத்து அறிந்து கொள்வதில் இருந்துதான், உண்மையான அறிவு வளர்கின்றது என்கிறார்.

நமக்கும் அது வளரும் என்று நம்புவோம்.

- *ஆசிரியர்*

# சனசமூக நிலையங்களுக்கு உதவுதொகை

# இதுவரை வழங்கப்படாதது ஏன்?

## முதலமைச்சர் விக்கியிடம் கேள்வி

(வலி.மேற்கு)

வடமாகாணத்தில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக வழங்கப்படுகின்ற நிதி ஏன் கடந்த மூன்று ஆண்டுகாலமாக வழங்கப்படவில்லை.

ஏ தரத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும், பி தரத்திற்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும் நிதி கடந்த 2011, 2012, 2013 ஆகிய மூன்று ஆண்டுகளாக வழங்கப்படவில்லை.

மூன்று ஆண்டு கால நிதியை முழுமையாக பெற்று வழங்க வடமாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்வரவேண்டும். இவ்வாறு தெரிவித்து வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை சிரேஷ்ட உறுப்பினர் சின்னத்தரை மகேந்திரன் வடமாகாண முதலமைச்சருக்கு அவசர கடிதம் மூலம் கோரியுள்ளார்.

மூன்று ஆண்டு கால சனசமூக நிலைய அபிவிருத்தி நன்கொடை நிதி எங்கே? எனும் தலைப்பில் எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு கேட்டுள்ளார்.

மேற்படி கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிராமிய மட்டத்தில் மக்களின் காவலனாக செயற்படுவது சனசமூக நிலையங்களே இன்று சனசமூக நிலையங்களே மக்களின் ஊடுகான் நிலையங்களாக செயற்படுகின்றன.

மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற நிறுவனமாக செயற்படுகின்ற அதேவேளை மக்கள் செய்திகளையும், துணுக்குகளையும், நூல்களையும், விளையாட்டு மற்றும் நலச்சேவைகளை வழங்குகின்ற நிறுவனமாக சனசமூக நிலையங்களே இன்று கிராமிய மட்டத்தில் செயற்படுகின்றன.

அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள் தமது தேவைகளை மக்களுக்கு கொண்டு செல்லும் நிறுவனமாக சனசமூக நிலையங்கள் செயற்படுகின்றன.

இவ்வாறு அபிவிருத்தியின் ஓர் அலகாக மக்களுக்கு செயலாற்றுகின்ற சனசமூக நிலையங்களுக்கு கடந்த 3 ஆண்டுகாலமாக வழங்கப்படுகின்ற நன்கொடை நிதி வழங்கப்படவில்லை. எனவே வடமாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளாக வந்துள்ள முதலமைச்சரும், அவரது அமைச்சர்களும், அமைச்சு செயலாளர்களும் கூடுதல் பங்களித்து கடந்த 3 ஆண்டுக்கான நிதிகளையும் பெற்று வழங்குமாறு கோரியே இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

# உயிர் காக்கும் மருந்துகளுக்கு அரச மருந்தகங்களில் தட்டுப்பாடு

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் மீண்டும் பாரிய அளவில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக அகில இலங்கை தாதி அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் காமினி குமாரசிங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இந்த நிலைமையால் நோயாளர்கள், சில முக்கியமான மருந்துப் பொருட்களை அதிக விலைக்கு தனியார் மருந்தகங்களில் கொளவனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதனைத் தவிர்க்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரி இருக்கிறார்.

இதேவேளை குளிரூட்டி பொருத்தப்படாத மருந்தகங்களில் இருந்து மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டாம் என்று, தேசிய அலங்கார பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரன அதிகாரசபை பொது மக்களை கோரியுள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்வதன் மூலம் மருந்துப் பொருட்களின் தரம் குறைந்ததாக காணபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அஞ்சல் முத்திரை துஷ்பிரயோகம் "பவ்ரல்" அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச முத்திரை அனுமதியை பயன்படுத்தி தேர்தல் வேட்பாளர்கள் தங்களின் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் அஞ்சல் மா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருக்கு கடிதம் மூலம் முறையிட்டிருப்பதாக, பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன் எட்டியாராச்சி தெரிவித்துள்ளார். தொடர்ச்சியாக இந்த செயற்பாடு அதிகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# இந்தியா ஊடாக ஆட்கடத்தல் கண்காணிப்பு இப்போது அதிகரிப்பு

(கொழும்பு)

சுற்றுலா விசாவின் மூலம் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்களுக்காக அனுப்பப்படுகின்றமை தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிமனை இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் இவ்வாறான செயற்பாட்டினை தடுக்கும் வேலைத்திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பணிமனையின் பிரதி முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் எந்தக் காரணத்துக்காகவும், சுற்றுலா விசா மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது ஆபத்தானது என்றும், அவ்வாறு சுற்றுலா விசாவின் மூலம் வேலைவாய்ப்புகளுக்கு செல்வதால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு, இலங்கையில் உள்ள வேலைவாய்ப்பு பணிமனையால் தலையிட முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# அரசைக் கவிழ்க்கும் சதி வலைத்தளம் மூலம் முயற்சி

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கவிழ்க்க கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் சமூக வலைதளங்கள் மூலம் முயற்சித்து வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம்சுமத்தியுள்ளார்.

கடுவலவில் அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவில், நேற்றுமாலை கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த பேஸ்புக் மற்றும் டுவிட்டரைப் பயன்படுத்தி விழிப்புணர்வு திட்டங்களை, முனைப்புகளை அமெரிக்க தூதரகம் கொண்டுள் ளது. மத்திய கிழக்கு நாடுகளின் அடக்குமுறை அரசாங்கங்களை பதவியில் அகற்ற சமூக வலைத்தளங்கள் ஒரு கருவியாக பயன்படுத்தப் பட்டன. அதேவிதமான முயற்சிகள் இலங்கையி லும் மேற்கொள்ளப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**சுகு-ஸ்ரீதரன்**

வியட்னாமில் வைரஸ் குண்டுகளை வீசியவர்கள் பிற்காலத்தில் ஈராக்கில் இரசாயன ஆயுதங்களைத் தேடுவதாக நாடகமாடினார்கள். இதற்கு ஐ.நா. சபையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

ஈராக்கில், லிபியாவில் தற்போது சிரியாவில் நடந்துகொண்டிருப்பவற்றைப் பார்க்கையில் என்ன தெரிகிறது.

சதாமோ, கடாபியோ சர்வாதிகாரிகளாக இருக்கலாம்.

ஆனால் அவர்களின் காலத்தில் ஈராக்கிலும் லிபியாவிலும் இருந்த "வாழ்க்கை" துவம்சம் செய்யப்பட்டு அங்கு நரகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

சிரியாவின் நிலைமை சொல்லவே தேவையில்லை.

எண்ணெய்க்காக இரத்தம் என்ற யுத்தம்!

அந்தந்த நாடுகளின் மக்கள் எக்கேடுகெட்டால் என்ன அவர்கள் பாழ்பட்டு வறுமை மிஞ்சி மடிந்து போனால் என்ன தமக்கு உலகம் அட்சயபாத்திரமாக இருக்கவேண்டும் என்று தான் வட அமெரிக்காவும் ஐரோப்பாவும் சிந்திக்கின்றன.

நேற்றிருந்த வாழ்க்கை தொலைக்கப்பட்டு நாளாந்த மரணமும் காட்டு மிராண்டித்தனமும் இந்த தேசங்களில் விதைக்கப்பட்டிருக்கிறது.

தமக்கு தேவைப்பட்ட இடத்தில் மத அடிப்படைவாதங்களைத் தூண்டிவிட்டார்கள்.

ஒப்பீட்டளவில் ஈராக்கிலும் லிபியாவிலும் பெண்களுக்கு முன்னர் பாதுகாப்பான வாழ்க்கை இருந்தது. மரபுரிமையான கலாசார பெறுமானங்கள் இருந்தன.

ஆனால் தற்போது வரலாறு அழிக்கப்பட்டிருக்கிறது. நாடுகள் நாகரிகங்கள் பல சுடுகாடுகள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

எண்ணெய்க்கிணறுகள்

யூகோசிலாவியாவை நாசமாக்க விரும்பியவர்கள் சகல மத இன மதப் பெருமிதங்களையும் தூண்டி விட்டு இனச் சுத்திகரிப்பு நிலைக்கு இட்டுச் சென்றார்கள்.

இந்தியாவை அணி சேரா இயக்கத்தை நாசம் செய்வதற்காக பாகிஸ்தானில் இருந்து ஆரம்பித்தார்கள்.

ஆப்கானில் முஜாஹிதீன்கள்

உருவாக்கப்பட்டார்கள்.

மதங்களின் கருத்துக்களை அடிப்படைவாதம் மட்டுக்கும் இழுத்துச் சென்றார்கள், தமது அடிப்படைவாத நோக்கங்களுக்காக.

அதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியும் பெற்றார்கள்.

ஆனால் அவர்கள் உருவாக்கிய பயங்கரவாதம் ஒரு புற்றுநோயாக இன்று உலகத்தை மாய்த்துக் கொண்டிருக்கிறது.

எமது தென்னாசிய நிலைமையைச் சொல்லவே தேவையில்லை. அது அன்றாட நிகழ்ச்சி ஆகிவிட்டது.

உலகில் எங்காவது அறம் சார் அரசுருவாக்கம் நிகழ்ந்தால் அது மேற்கத்திய ஆதிக்க ஊடகங்களின் அவதூறுகள், நிந்தனைகள், சூழ்ச்சிகரமான ப்லப்பிரயோகத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றன.

உலகத்தை சிதறடித்து தமது நுகர்வுச் சுரண்டலுக்கான களமாக மாற்றுவது இவர்களின் வேலையாக இருக்கிறது.

இவர்கள் கொசோவோவை உருவாக்கி சுயநிர்ணய உரிமை என்றார்கள். தெற்கு சூடானும் அவ்வாறே.

ஆனால் கிரிமியா உக்ரேனின் இறைமை என்கிறார்கள்.

இவர்கள் ஈராக் லிபியா மீது தாக்குதல் நடத்தினால் அது ஜனநாயக நிர்மாணம்.

கிரிமியர்கள் தமது பாரம்பரிய செயற்படாமல் கதையளப்பதாக அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளர் யோன் கெரி 19 ஆம் நூற்றாண்டு ஆக்கிரமிப்பு முறையை 21 ஆம் நூற்றாண்டில் புட்டின் பின்பற்றுவது சரிப்பட்டுவராது என்று ஆவேசப்படுகிறார்.

ஈராக் லிபியாவில் அல்லது சிரியாவில் தற்போது தாங்கள் விளைவிக்கும்



**உலகில் அடாவடித்தனம் பரவுவதற்கான தமது உரிமை மீது யாரும் கேள்வி எழுப்பக் கூடாது என்பதே அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் அகங்கார நிலைப்பாடாக இருக்கிறது. தங்களது அடாவடித்தனத்திற்கு உலகம் வழிவிடவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அமெரிக்க மேற்கத்திய ஊடகங்கள் மனித உரிமை அமைப்புக்கள் கீவில் பாசிஸ்டுகள் தலையெடுத்திருப்பது பற்றி மூச்சுக் காட்டவில்லை. உலகத்தின் மீது காட்டுமிராண்டித்தனத்தையும் சர்வாதிகாரத்தையும் பாசிச மத அடிப்படைவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டு ஊக்கப்படுத்திக் கொண்டு மறு பக்கம் ஜனநாயகம், மனித உரிமை, பேரழிவு ஆயுதங்களைப் பற்றிப் பேசுகிறார்கள்.**

மனித உரிமை அமைப்புக்கள் கீவில் பாசிஸ்டுகள் தலையெடுத்திருப்பது பற்றி மூச்சுக் காட்டவில்லை.

உலகத்தின் மீது காட்டுமிராண்டித் தனத்தையும் சர்வாதிகாரத்தையும் பாசிச மத அடிப்படைவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டு ஊக்கப்படுத்திக் கொண்டு மறு பக்கம் ஜனநாயகம் மனித உரிமை பேரழிவு ஆயுதங்களைப் பற்றிப் பேசுகிறார்கள்.

பேரழிவு ஆயுதங்கள் உற்பத்தியாளர்களாகவும் ஏக விநியோகஸ்தர்களாகவும் இவர்களே இருக்கிறார்கள். இவர்களின் உலகின் மீதான எதேச்சதிகாரத்தை இந்த நாடுகளின் மக்கள் கண்டு கொள்ளாதவாறு ஐரோப்பிய வட அமெரிக்க மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளின் ஊடகங்கள் என்பவற்றின் ஒருதலைப்பட்சமான பெரும் பிரசார இயக்கம் என்பன இந்த மக்களை போதையில் கிறங்க வைத்திருக்கின்றன. உலகம் பெருமளவிற்கு நரகமாக்கப்பட்டிருக்கிறது என்பது இவர்களில் பெரும்பாலானோருக்கு தெரியவில்லை.

தற்போது உக்ரேனில் பாசிசத்தை ஆட்சிக்கு கொண்டு வந்திருப்பது சிலவேளை ஒரு பொறியாக இந்த மக்கள் விழித்துக் கொள்ள உதவலாம்.

இந்த ஏகாதிபத்திய சக்திகள் ஒரு அணு ஆயுத யுத்த அபாயத்தின் விளிம்பை நோக்கி உலகத்தை வழி நடாத்தியுள்ளன.

விரல் விட்டு எண்ணக் கூடிய பணமுதலாளிகளின் சூறையாடல் களமாகவே உலகத்தை வைத்திருக்க இவர்கள் விரும்புகிறார்கள். அந்த நலன்களை எந்த ஒரு இரத்தக் களரியும் இல்லாமல் பரோபகாரமாக இவர்கள் ஒருக்காலும் தாரை வார்க்கமாட்டார்கள்.

# உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான ஜனநாயகம், மனித உரிமை, இறையாண்மை, சுயநிர்ணயம் அப்படி ஏதும் இருக்கிறதா?

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐ.நா சபை, மத அடிப்படைவாத தேசியம், நிறவெறி பாசிசம், ஆயுத வியாபாரம் எல்லாவற்றையும் தமது நலன்களுக்காக செயற்படுத்துவார்கள்.

ரஷ்யாவிற்கெதிராக தடைவிதிப்பதில் ஐரோப்பிய நாடுகளிடையே ஈடாட்டம் காணப்பட்டது. ஜேர்மனி பிரித்தானியா கொஞ்சம் பொறுமைகாக்க விரும்பின. ஜேர்மனி தனது எரிபொருள் பெற்றோலிய காஸ் தேவைகளுக்கு பெருமளவிற்கு ரஸ்சியாவில் தங்கியுள்ளது. ரஷ்யாவுடனான வியாபாரத்தினை கைவிடுவதில் பிரிட்டனுக்கு தயக்கங்கள் காணப்படுகிறது. அமெரிக்கா அவசர அவசரமாக காரியமாற்ற முயல்கிறது.

உக்ரேனின் பாசிச அதிகாரம் நீடிக்க முடியாது. ரஷ்யாவிற்கெதிரான அமெரிக்க ஐரோப்பிய கூட்டும் நீடிக்க முடியாது. எல்லை மீறிப் போய்விட்டதால்- உலகளாவிய அராஜகம் தலை தூக்கியுள்ளதால் நிலைமைகள் தலை கீழாகவும் மாறலாம். அவர்கள் ரஷ்யா என்ற மாபெரும் நாடு இருக்கக் கூடாது என்று சிந்தித்தால் அது உலகளாவிய விபரீதமாகும்.

ஐரோப்பிய மக்களுக்கு பாசிசத்தின் கொடூர அனுபவம் இருக்கிறது. அது பற்றிய விழிப்புணர்வும் இருக்கிறது.

சீனா, இந்தியா, ரஷ்யா, கியூபா, பிறேசில், வெனிசூலா, வியட்னாம், தென்னாபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் பிற மூன்றாம் உலக நாடுகள் புதிய மீள் அணி சேர்க்கை பற்றித் தீவிரமாக சிந்திக்க வேண்டிய அளவிற்கு நிலைமைகள் தீவிரமடைகின்றன.

எரிந்தன. நச்சுப் புகை மண்டிய மேகங்களும் வெடிமருந்துகள், இரசாயனங்கள் தாங்கிய பூமியாகவும் போய்விட்டன.

மக்களைப் பிச்சைக்காரர்களாக ஊனமுற்றவர்களாக....

சிறுவர்களின் நிலை கொடூரமானது.

இவற்றுக்கு முன்னர் ஐரோப்பாவில் யூகோசிலாவியாவின் நிலையைப் பார்ப்போம். டிட்டோவின் காலத்தில் அது எத்தகைய கீர்த்தி வாய்ந்த நாடாக இருந்தது.

சோசலிச உலகத்தை வீழ்த்துவதற்கான உலக ஏகாதிபத்தியத்தின் நோக்கங்களுக்காக அந்த நாடு சிதைக்கப்பட்டது. மனிதப்பேரழிவுகளைச் சந்தித்தது.

சேர்பியா, பொஸ்னியா, குரோசியா, கொசோவோ... இங்கெல்லாம் மனிதப்பேரழிவு பிரமாண்டமான பாலியல் கொடூரங்களினூடாக சிதைக்கப் பட்டது. வெறுமனே சேர்பியர்களின் மீது மற்றும் மிலோசெவிக் மீது மாத்திரம் பழிபோட்டு விட முடியாது.

உறவு பாதுகாப்பு தொடர்பில் ரஷ்யாவிடம் உதவி கோரினால் அது உக்ரேனிய இறையாண்மை தொடர்பான பிரச்சினை. 19 ஆம் நூற்றாண்டு பாணி ஆக்கிரமிப்பு?

அமெரிக்க ராஜாங்கச்செயலாளர் யோன் ஹெரியின் நகைப்பிற்கிடமான விளக்கம் இது.

லத்தீன் மற்றும் தென்னமெரிக்க நாடுகளில் நிகழும் சமூக பொருளாதார எழுச்சிகள் இவர்களை முகம் சுழிக்க வைப்பவை.

ஆனால் பாசிஸ்டுகள் வலதுசாரிகளுடன் கூட்டமைத்து உக்ரேனில் ஆட்சி அமைத்தால் அது புரட்சி.

இவர்கள் மனித உரிமை என்றால் என்னவென்றே தெரியாத அரபு ஷேக்குகளை சகித்துக் கொள்வார்கள். பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் களை சகிப்பார்கள். ஆனால் ஜனநாயக இடதுசாரிகளை சகிக்கமாட்டார்கள்.

கலிபோர்னியாவின் செனட்டர் கிரிமியாவில் ரஷ்யப் பிரசன்னத்தை இட்டு ஒபாமா அரசை கர்ண கடூரமாக விமர்சிக்கிறார்.

ரஷ்யக் குண்டர்கள் கிரிமிய ஆக்கிரமிப்பிற்கெதிராக உடனடியாகச் நாசகார முறைகளை பிரயோகிக்க கூறுகிறாரா?

கிரிமியாவில் இரத்தம் தோயாத ரஷ்யப் பிரசன்னம் இருக்கிறது.

கீவில் வலதுசாரி பாசிஸ்டுகள் ஆட்சி அமைத்திருக்கிறார்கள். நிலைமை சீரடையும் வரை தாம் அங்கே இருக்கப் போவதாயும், தெற்கிலும் கிழக்குப் பகுதிகளிலும் ரஷ்யமொழி பேசுபவர்கள் இருக்கிறார்கள், அவர்களை பாதுகாக்கவேண்டிய கடப்பாடும் தமக்கிருப்பதாக ஒபாமாவிடம் தொலைபேசியில் சொல்லியிருக்கிறார் புட்டின்.

உலகில் அடாவடித்தனம் பரவுவதற்கான தமது உரிமை மீது யாரும் கேள்வி எழுப்பக் கூடாது என்பதே அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் அகங்கார நிலைப்பாடாக இருக்கிறது.

ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்போவதாகவும் ஜி-8 இல் இருந்து நீக்கிவிடப் போவதாகவும் அச்சுறுத்துகிறார்கள்.

தங்களது அடாவடித்தனத்திற்கு உலகம் வழிவிடவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அமெரிக்க மேற்கத்திய ஊடகங்கள்

# அரசியலுக்குள் கால் வைக்க பௌத்த பிக்குகளுக்கு தடையா?

## சீறுகிறார் சீலரட்ன தேரர்



பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனைத் தடை செய்யக் கூடாது என பத்தரமுல்ல சீலரட்ன தேரர் தெரிவித்துள் ளார. இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான அமரபுர மஹா பீடம், அந்தப் பீடத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனைத் தடை செய் துள் ளது. இந்த நடவடிக்கையானது கண்டனத்திற்குரியது என ஜனசெத்த பெரமுன கட்சியின் தலைவரும், பௌத்த பிக்குவுமான சீலரட்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தாம் சியாம் பீடத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு எனவும், இவ்வாறான ஓர் தடை தமது பீடத்தினால் பிறப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக உள்நாட்டு சர்வதேச சட்ட ரீதியான நடவ டிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பௌத்த பிக்குகளும் மனிதர்களே எனவும் அவர்கள் அரசியலில் ஈடுபடுவதில் தவறில்லை எனவும அவர் குறிப்பிட்டுள்ளார். தடை விதிக்கப்பட்டால், அடிப்படை மனித உரிமைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# தினசரி பத்து பெண்கள் பாலியல் கொடுமைக்குள்

நாள்தோறும் நாடு முழுவதும் குறைந்தது பத்து பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக உரிமைகளுக்கான மகளிர் அமைப்பு அறிவித்துள்ளது. உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தும் போது அல்லது வேறும் ஏதேனும சந்தர்ப்பங்களில் 90 வீதமான பெண்கள் ஏதோவொரு வகையில் துன்புறுத்தப்படுகின்றனர். வருடமொன்றில் 18000 சிறுவர் துஷபிரயோக சம்பவங்கள் பாதிவாகின்றன. பாலியல் ரீதியான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு குற்றவியல் சட்டத்தின் அடிபடையில் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் போதைப் பொருள், மதுபான கடத்தல் நடவடிக்கைகளினால் பாரியளவில் சமூக சீரழிவு ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

# உள்ளக விசாரணையை பரிந்துரைக்க ஐக்கிய நாடுகள் சபை தேவையில்லை

## புரட்டிப் பேடுகிறார் மன்னார் ஆயர்



அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் தீர்மானமானது தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தருமென்று நம்பியிருந்த போதும் அது இப்பொழுது ஏமாற்றம் தந்து நிற்கின்றது. இலங்கையில் உள்ளக விசாரணை குறித்துக் கூறுவதற்கு அமெரிக்காவோ ஐ.நா.வோ தேவையில்லை என மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்தார்.

மேலும் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்படும் விசாரணை நம்பகத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா முன்வைத்துள்ள வரைபு குறித்து கருத்து வெளியிட்ட போதே ஆயர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் இலங்கை இழைத்த மனித உரிமை மீறல்களுக்கு ஒரு சர்வதேச விசாரணை கொண்டு வரப்பட வேண்டும் என சிபாரிசு செய்தது போலவே, அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் தீர்மானத்திலும் அது வலியுறுத்தப்படுமென உலகம் நம்பிக் கொண்டிருந்த வேளையில், திடீரென அமெரிக்க தீர்மானத்தின வலுத்தன்மை குறைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி தருகின்ற விடயமாக மாறியுள்ளது.

ஆனால் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த அறிக்கையில் சர்வதேச விசாரணை ஒன்று போர்க் குற்றம் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையில் அத்தகையதொரு சிபாரிசு இல்லாமலே போய்விட்டது. ஆகவே இந்தவிடயம் பெருத்த ஏமாற்றம் தரும் விடயமாக தமிழ் மக்களுக்கு ஆகிவிட்டது. காரணம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை எவ்வகை ஈடுபாட்டைச் செலுத்தி தனது அதிகார வரம்புக்குள் உண்மையைக் கண்டறிய விளையும் என்பதில் சந்தேகங்க ள் நிலவலாம்.

அதேவேளை இலங்கை அரசை நீங்களே விசாரணை செய்யுங்கள் என சுதந்திரமாக விட்டால் அவர்கள் செய்த குற்றத்தை அவர்களே விசாரிப்பதானால் உண்மையும் கண்டறியப்பட மாட்டாது. நீதியும் கிடைக்காது.

இதுதான் இவ்வளவு காலமும் இலங்கையில் நடைபெற்ற விசாரணைகளாகும். தங்கள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை தாங்களே விசாரணை நடத்துவதாக இருந்தால் இலங்கையில எந்தவித போர்க்குற்றமும் இழைக்கப்படவில்லை. எவ்வித மனித உரிமை மீறல்களும் இடம் பெறவில்லை என்றே கூறித் தாம் தப்பித்துக் கொண்டு விடுவார்கள்.

இப்படியான தீர்ப்பை வழங்குவதற்கு அமெரிக்காவோ அல்லது ஐ.நா. சபையோ எமக்கு வேண்டியதில்லை. எனவே மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணை ஒன்று மேற்கொள்வதன் மூலமே இலங்கையில் நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியும். எனவே தான் வெளிநாட்டு அமைப்புகளினதோ நாடுகளினதோ மேற்பார்வை இருக்க வேண்டுமென தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

# சுற்றுலா என்ற போர்வையில் நாட்டுக்குள் வியாபாரிகள் படையெடுப்பு

## இறுக்கமடைகிறது வீசா விதிமுறை

(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கான வீசா வகையீடு செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டு பிரஜைகள் தொடர்பில் வீசா வழங்கும் நடைமுறைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டில் நாட்டுக்குள் பிரவேசித்த 1.2 மில்லியன் வெளிநாட்டவர்களில் 300,000 பேர் சுற்றுலாப் பயணிகள் அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது,

தற்போது வழங்கப்பட்டு வரும் வீசா வகையீடுகளின் காரணமாக இவர்கள் சுற்றுலாப்




பயணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் இந்த நடைமுறையில் மாற்றங்கள கொண்டு வரப்பட உள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்வோர் வர்த்தக நடவடிக்கைகளிலேயே அதிகளவில் ஈடுபட்டு வருவதாகவும் இவர்களை சுற்றுலாப் பயணிகளாக கருத முடியாது எனவும் தெரிவித்துள்ளது. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையிலேயே நாட்டின் சுற்றுலாப் பயணிகள் பற்றிய தகவல்களை இலங்கை சுற்றுலா சபை வெளியிட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மெய்யான சுற்றுலாப் பயணிகளை அறிந்து கொள்ளும் வகையில் புதிய நடைமுறைகள் பின்பற்றப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது, எதிர்காலத்தில் நாட்டுக்குள் பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் தொடர்பான தகவல்கள் தனியாக பதிவு செய்யப்பட உள்ளது.

# தெற்கில் பாரிய ரயில் தடம் நிர்மாணப் பணிகள் சீனாவிடம்



(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் பாரியளவிலான ரயில் பாதை அமைக்கும் பொறுப்பு சீன நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பெலியத்த - கதிர்காமம் ரயில் பாதை அமைக்கும் பணிகள், சீன நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ரயில் பாதை நிர்மாணப் பணிக்காக 600 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட உள்ளது.

சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து இதற்கான கடன் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார. குறித்த பாதையின் முதல் கட்ட நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்டுள்ளன. இதன் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 2016ஆம் நிறைவடையும் என எதிர்பார்க் கப்படுகிறது.

குறித்த சீன நிறுவனம், துறைமுகம் மற்றும் விமான நிலைய நிர்மாணப் பணிகளையும் மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு இளைஞர் துடிதுடித்து மரணம்

## ஆயுததாரிகள் கைவரிசை

(கொழும்பு)

கம்பஹா - உடகம்பொல பிரதேசத்தில் 19 வயதான இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் வண்டியில் சென்ற இனந்தெரியாத நபர்களினால் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இளைஞன் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் தாயார் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நிலையில் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

. வர்த்தக நிலைய கொள்ளையில் ஈடுபடச் சென்ற நபர்களினால் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரது ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இணைய வழி மூலமான சீட்டிழுப்பு இளவயதினரை ஈர்க்க முயற்சி

## மலேசிய நிறுவனம் களத்தில்

(கொழும்பு)

தனியார் துறையினரும் எதிர்காலத்தில் லொத்தர் சீட்டிழுப்பு முறையினை அறிமுகப்படுத்துவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இளைஞர்களை இலக்காகக் கொண்டு இ கேம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த இணையத்தளம் மூலமான சீட்டிழுப்பால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் எழுப்பப்பட்டுள்ளது.

ஓசியானிக் கேம்ஸ் என்ற தனியார் நிறுவனம் இதற்கான அனுமதியைப் பெற்றுள்ளது.

ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் மலேசியாவின் உரிமை நிறுவனமாகும். இதன்காரணமாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசாங்கத்தின் தேசிய லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றின் இலாபம் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய லொத்தர் சபை கடந்த வருடத்தில் 14.5 பில்லியன் ரூபாய் இலாபத்தைப் பெற்றிருந்தது.

இந்த வருடத்தில் அதனை 20 பில்லியன்களாக உயர்த்த அது திட்டமிட்டிருந்தது. எனினும் இகேம் இணைய லொத்தர் காரணமாக இந்த இலாபத்தில்



குறைவு ஏற்படலாம் என்ற அந்த சபை அச்சம் வெளியிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் மலேசிய நிறுவனத்துக்கு 100 பேர்ச்சஸ் காணியை கொழும்பில் வழங்கவுள்ளது.



கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்ச் சங்கத்தினரால் கண்டாவளை கல்விக் கோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்ட தமிழ்ச் சான்றோர் விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பரிசில் வழங்கப்படுவதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் காணலாம். (112)

# கலாசார பிறழ்வுகளிலிருந்து பாதுகாத்து பிள்ளைகளை ஆன்மீகத்தில் வளர்ப்போம்

## இரா.செல்வவழிவேல் ஆலோசனை

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஆன்மீகப் பற்றினை ஏற்படுத்தி சமய வாழ்வைப் பின் [illegible] வாழப்பழக்க வேண்டும் இவ்வாறு செய்வதன் மூலமே எதிர்காலச் சந்த தியினரைக் கலாசாரப் பிறழ்வுகள் மற்றும் அடாவடித்தனங்களிலிருந்து மீட்டெடுக்க முடியும்.

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 59 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்ற போது அந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்திய சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது,

எமது நாட்டில் அண்மைக் காலமாக இளைய தலைமுறையினரி[illegible]யே ஆன்மீகம் குன்றி சமய விழுமியங்கள் அருகி வருவது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகளை ஆலயங்களுக்கு அழைத்து வரவேண்டும். அவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி ஆன்மீக உணர்வினையும் பக்தியையும் ஏற்படுத்த வேண்டும்.

இதற்கு சைவசமய அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். பாடசாலை மாணவர்களுக்குச் சைவசமயப் பாடப் பரீட்சை நடாத்துவதே பெரும் சிரமமாக உள்ளது. சைவ சமய பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள சமயபாட விடைத்தாள் திருத்துவதற்கு அதிகளவில் பணத்தை எதிர்பார்க்கின்றனர். இதுமட்டுமன்றி பரட்சை மண்டபத்தில் மூன்று மணி நேரம் பரீட்சை மேற்பார்வை செய்வதற்கும் கூட பணத்தை எதிர்பார்ப்பது வேதனையளிக்கின்றது.

ஏனைய மதத்தவர்கள் மத ரீதியான பரீட்சைகளுக்கு அந்த மதங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தொண்டாற்றுவதுடன் ஒரு நாள் முழுவதையும் அர்ப்பணித்து பரீட்சை மேற்பார்வையை மட்டுமல்ல விடைத்தாள்களையும் உடனேயே திருத்தியும் கொடுக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று கூறும் சைவ சமயத்தில் உள்ள மக்களின் இன்றைய நிலை கண்டு வருந்துகிறேன். மீண்டும் சைவ சமயம் புத் துயிர் பெற வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளைச் சிறுபிரா யத்தில் இருந்தே ஆன்மீக நாட்ட முடையவர்களாக பக்தியும இறைவழிபாடு முள்ளவர்களாக வளர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (10)

# ஆலய மகோற்சவம்

(அச்சுவேலி)

புத்தூர் கிழக்கு வீரவாணி ஸ்ரீ நாச்சிமார் சபாகன்னிகள் அம்பாள் ஆலய மகேற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதமகுரு சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதிதாக அமைக்கப்பட்ட தேரின் வெள்ளோட்ட நிகழ்வும், 21 ஆம திகதி காலை 9.30 மணிக்கு தேர்த திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (03)

# வடமாகாண சிறுவர் நீதிமன்றங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம்

வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தனது உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்களை வழங்கிவருவதாக தெரிய வந்துள்ளது

யாழ் குருநகரில் உள்ள சிறுவர நீதிமன்றத்தில் நன்னடத்தை பொறுப்பதிகாரியாக இருந்த சி.சிவகரன் முல்லைத்தீவு மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலராக கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.இவர் மேலதிக கடமையாக கரைத்துறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவின் சிறுவர் நன்னடத்தை அதிகாரியாகவும் பணியாற்றுகின்றார்.

யாழ்.குருநகரிலுள்ள சிறுவர் நீதிமன்றத்தின் நன்ன டத்தை பொறுப்பதிகாரியாக எஸ்.சுகந்தராஜ கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட சிறுவர் நன்னடத்தை பொறுப்பதிகாரியாக இருந்த இராமசாமி ராஜன் கிளிநொச்சி மாவட்டத்தில இயங்கும் குடும்பங்களை மீள் இணைக்கும் பிரிவிற்கு இடமாற்றப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.இப் பிரிவிற்கு பொறுப்பான பிரிகேடியர் கல்கமுவவின் கீழ் இணைந்து இ.ராஜன் தற்போது பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(90)

# முரசின் இன்றைய பலன்



(10.03.2014 திங்கட்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 26 ஆம் திகதி.
திருவாதிரை நட்சத்திரம்
மு.இ 01.35 வரை பின் நவமி சித்தாமிர்தம்
இராகுகாலம் 07.53- 09.23 வரை. சுபநேரம் 12.23- 1.53வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பித்தலாட்டம், வஞ்சக சிந்தனை உள்ளோர் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும், வங்கிக் கடன் கிடைக்கும் தொழில் முயற்சியில் ஈடுபடலாம். |
| ரிஷபம் | குழந்தைப் பலன் கிட்டுவதால் மகிழ்சி வெள்ளம், புதிய உறவினர் தொடர்புகள் கிடைக்கலாம். |
| மிதுனம் | வீதி விதிமுறைகளை கடைப்பிடித்தல் அவசியம், குற்றங்கள் புரிவதால் தண்டம் செலுத்தலாம், பெருட் கொள்வனவில் அவதானம் தேவை |
| கடகம் | புதிய பொருட் கொள்வனவிற்கு சகோதரர் உதவுதல், சோதனைகள் விலகலாம். |
| சிம்மம் | பரீட்சையில் சித்தியடைவீர். நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வரலாம், சொத்துக் கிடைக்கலாம். |
| கன்னி | செய் தொழிலை விட்டு விலக நேரிடலாம், தொழிலில் பாரிய நாஷ்டம் ஏற்படலாம், இடமாற்றம் தவிர்க்கப்படும், மகிழ்ச்சி ஏற்படும். |
| துலாம் | பிரச்சினைகளை சுமுகமாக திர்ப்பீர்கள், கௌரவத்துக்கு இழுக்கு வர நேரிடலாம். |
| விருச்சிகம் | விளம்பரத்தில் நம்பிக்கை வைப்பதில் பிரச்சினைகள் அதிகரிக்கும், பயணங்கள் கைவிட லாம், குடும்பத்தில் பணப் பிரச்சினைகள் ஏற்படலாம். |
| தனுசு | மன ஆரோக்கியம் பெற உடற்பயிற்சியில் ஈடுபட முஸ்தீபு, வறட்சியின் பாதிப்பினால் மனக்கிலேசமடைதல் |
| மகரம் | வீட்டுத்திட்டம் கிடைத்ததால் மகிழ்வு தக்க வைத்தல், பயன்கிடைக்க முயற்சிகள் செய்தல். |
| கும்பம் | விபத்து விலகுதல், பங்குத் தொழிலில் சேர முற்படலாம், பண விடயத்தில் அவதானம் தேவை |
| மீனம் | கருத்து வேறுபாடுகள் அகலலாம், மகிழ்ச்சி ஏற்படல், நோய் குணமடைய தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளலாம். |

# என்றும் குன்றாத ஜோதிட நம்பிக்கை துடிப்புக்களின் பலாபலன்கள்

உங்கள் அங்கங்களில் ஏதோ ஒன்று துடிப்பதாக உணருகிறீர்களா? அங்கத் துடிப்பின் பலாபலன்கள் மானிடகுலம் தோற்றம் பெற்ற காலம் முதல் இன்று வரை சோதிட நூல் வல் லோர் கண்டறிந்து வகுத்து தொகுத்து ஏட்டிலும் நூல்களிலும் பொய்யா மொழியாக எழுதி வைத்துள்ளமை பெருமை சேர்ப்பதாகும்.

உடலில் ஏற்பட்டுள்ள மச்சங்கள் பிறந்த பொழுது எழுதப்படும் ஜாதகம்/ கைரேகை/ காண்டம் சாமுத்திரிகா இலட்சண ஜோதிடம் கலையாடல்/ குறிசொல்லல் முதலியவை மூலம் பண்டைய சான்றோர்கள் மனிதனுடைய வாழ்க்கைப் பலாபலன்களை உணர்ந்தனர். இவற்றை பத்தாம் பசலி, பழைய குப்பை நடைமுறைக்கு ஒத்துவராத சங்கதிகள் என்று ஒதுக்கிவிடாது விஞ்ஞானம் புதுமைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் இன்றைய யுகத்திலும் இத்தகைய சோதிடங்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பது கண்கூடு.

மனித உடலில் நாடித்துடிப்பு இடையறாது நிகழ்கின்றது. நாடித்துடிப்பு உயிரின் நிலையை உணர்த்தும் இதனை உயிர் நாடித்துடிப்புமென்பர். நாடித் துடிப்பில் ஏற்றத் தாழ்வு காணப்படின் நோயின் தாக்குதலைச் சுட்டும். இதனை "நோய் நாடி" என்பர். உடலின் ஆரோக்கியம் நோயின் நிலையை அறிய மருத்துவர்கள் "நாடியை" பயன்படுத்துவது போன்று அங் கத்துடிப்பைக் கொண்டு வாழ்வின் நலத்தை வரவிருக்கும் இன்ப துன்பங்களை துல்லிமாக அறிந்து கொள்ளலாம்.


### தலை

தலையின் உச்சிப்பகுதி துடித்தால் நற்பலன்கள் ஏற்படும். நீங்காமல் இருந்து வந்த துன்பமெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல அற்று விடும். உச்சந்தலையின் வலது பாகத்தில் ஆண்/பெண் வேறுபாடின்றி துடிப்பு ஏற்படின் அச்சம் உண்டாகும். இடது பக்கமெனின் சிறப்பும் பெருமையும் தேடி வரும் தலையின் பின்பகுதி துடித்தால் பகை நேரிடும். தலைப் பாகம் முழுவதும் துடித்தால் நன்மையுண்டாகும். எதிர்பாராத விதமாக புகழும் செல்வமும் வாழ்க்கை வசதிகளும் அமைந்து விடும்.

(தொடரும்...)

ஜோதிர் வித்யா ரத்னா
வி.ஏ.சிவராசா

# தக்கவைப்பது சவால்



இப்போதுள்ள நிலையில் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் அசத்தி, கிண்ணத்தைத் தக்கவைப்பது கடினம் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி-20 உலக கோப்பை தொடரில் சாதித்து, மீண்டும் கிண்ணத்தைக் கைப்பற்றினால் நன்றாகத்தான் இருக்கும்.

ஆனால், மற்ற அணி வீரர்கள் திறமை, ஆட்டத் திறன் இவற்றைப் பார்க்கும் போது கோப்பையை தக்கவைப்பது மிகவும் கடினம் என்றே தெரிகிறது.

முதலில் முதல் சுற்றினை தாண்டுவது தான் முதல் இலட்சியமாக இருக்க வேண்டும். இதில் சாதித்து விட்டால், பின் அரையிறுதி, அடுத்து இறுதிப் போட்டிக்குச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதேநேரம், சமீபத்திய ருவென்ரி-20 போட்டிகளில் எங்கள் அணி சரியாகச் செயற்படவில்லை. பல போட்டிகளில் தோற்றுள்ளோம். இங்கிலாந்துக்கு எதிரான ருவென்ரி-20 தொடரில் அசத்தி, நாங்கள் அபாயகரமான அணி என்ற எண்ணத்தை மீண்டும் ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு நாள் அணியில் விரைவில் இணைவேன்

(புதுடில்லி)

உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டியில் சிறப்பாக ஆடி மீண்டும் ஒரு நாள் அணியில் இடம்பிடிப்பேன் என இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

ஆசிய கோப்பை போட்டிக்கான அணியில் இடம் பிடிக்க முடியாமல் போனது கஷ்டமாகத் தான் இருந்தது. உள்ளூர் போட்டிகளில் விளையாடி எனது உடல் தகுதியில் முன்னேற்றம் காண கடுமையாக உழைத்து வருகிறேன். எனது கவனத்தை அதிகப்படுத்த தியான பயிற்சியும் செய்கிறேன். முன்னாள் கப்டன் கங்குலி எனக்கு துடுப்பாட்ட ஆலோசனைகள் வழங்கியுள்ளார். எதிர்வரும் ருவென்ரி-20 உலக கோப்பை போட்டியில் எனது ஆட்டத்தில் வித்தியாசத்தை வெளிப்படுத்தும் வகையில் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.






## முன்னேற்றம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நடக்கும் இண்டியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, கனடா வீராங்கனை யூஜெனி பவுச்சார்ட் தகுதி பெற்றார். இரண்டாவது சுற்றில் சீனாவின் சுவாய் பெங்குடன் நேற்று முன்தினம் மோதிய பவுச்சார்ட் 6-2, 6-2 என நேர் செட்களில் மிக எளிதாக வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு 2ஆவது சுற்று ஆட்டத்தில் ரோமானியாவின் சிமோனா ஹாலெப் 6-2, 6-2 என்ற நேர் செட்களில் ஜப்பான் வீராங்கனை குருமி நாராவை வீழ்த்தினார்.

இதேவேளை, நட்சத்திர வீராங்கனை விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) 0-6, 6-7 (2-7) என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் லாரன் டேவிஸிடம் பரிதாபமாக தோற்று வெளியேறினார்.

## கூட்டு முயற்சியே கிண்ணம் வெல்லக் காரணம்



(டாக்கா)

அணியின் கூட்டு முயற்சியே ஆசியக் கிண்ணத்தை இலகுவாகக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

சில ஆண்டுகளாக இறுதிப்போட்டிகளில் தோற்பதற்கு முடிவு கட்ட வேண்டும் என்று விரும்பினோம். அது ஆசியக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நிறைவேறியது மகிழ்ச்சி அளிக்கிறது. இது ஒட்டுமொத்த அணிக்கு கிடைத்த மிகச்சிறந்த வெற்றி. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மலிங்க அற்புதமாக பந்து வீசினார். இறுதிக்கட்டத்தில் சமாளிக்க கூடுதலாக ஒரு வேகப்பந்து வீச்சாளர் தேவை என்று கருதியதால், அஜந்தா மென்டிஸை நீக்க வேண்டியதாகி விட்டது. அவரை நீக்க எடுத்த முடிவு கடினமானது. பங்களாதேஷில் உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டி நடைபெறவுள்ளதால் ஆசியக் கிண்ண தொடர் பெரும் பயிற்சிக்களமாகவும் அமைந்திருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தோல்வி குறித்து கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல்ஹக், ஆரம்பத்தில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்ததால் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டோம். பின்னர் சரிவில் இருந்து நல்லபடியாக மீண்டு வந்தோம். என்றாலும் மேலும் 20 முதல் 25 ஓட்டங்கள் எடுத்திருக்க வேண்டும். பந்து வீச்சில் எதிரணிக்கு எங்களால் போதுமான நெருக்கடி கொடுக்க இயலவில்லை. சயிட் அஜ்மல் அருமையாக பந்து வீசி எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தார். ஆனால் மறுமுனையில் வீசிய பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களை தாராளமாக வழங்கிவிட்டனர். மலிங்க சம்பியன் வீரர் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் எனத் தெரிவித்தார்.



## கிராண்ட்ஸ்லாம் போட்டிகளைவிட பத்திரிகையாளர் பணி கடினம்

ரஷ்யாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியின்போது, ஷரபோவா, பத்திரிகையாளராக பணியாற்றியுள்ளார்.

ரஷ்ய ரென்னிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா, (வயது-26). நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற பெருமைமிக்க இவர், சைபீரியாவில் பிறந்தவர். தனது 2 வயதில் சோச்சிக்கு வந்த இவர், 6 ஆண்டுகள் வசித்துள்ளார்.

இந்த நகரில் தான், சமீபத்தில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அப்போது இவர், என்.பி.சி., தொலைக்காட்சி நிறுவனத்தில் கலாசார தூதராக செயற்பட்டு, இரண்டு வாரம் பத்திரிகையாளராகவும் பணியாற்றினாராம்.

இதுகுறித்து ஷரபோவா குறிப்பிடுகையில, ரென்னிஸ் பற்றி எல்லாம் தெரியும். ஆனால், பத்திரிகையாளர் பணியில் என்ன செய்ய வேண்டும் என, எதுவும் தெரியாது. கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் மூன்று செட் போட்டிகளில் பங்கேற்பதை விட, பத்திரிகையாளராக செயற்பட்டது கடினமாக இருந்தது.

குளிர்கால ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் சென்றது, எனக்கு கிடைத்த பெரிய மரியாதையாக கருதுகிறேன். இந்த தருணம் மிகவும் உணர்ச்சிபூர்வமானதாக இருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காலிறுதியில் சானியா ஜோடி



(கலிபோர்னியா)

பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி முன்னேறியது.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சானியா, சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி, அமெரிக்காவின் ராகியுல், அபிகய்ல் ஜோடியை சந்தித்தது. இதன் முதல் செட்டை 6-3 என கைப்பற்றிய சானியா ஜோடி, இரண்டாவது செட்டையும் 6-4 என தன்வசப்படுத்தியது. முடிவில், சானியா, காரா பிளாக் ஜோடி 6-3, 6-4 என வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

## ஊடகங்கள் விசனம்

கனவான்களின் விளையாட்டு என்று வர்ணிக்கப்படும் கிரிக்கெட்டில், அவுஸ்ரேலிய வீரர்களின் நடத்தை மோசமாக உள்ளது என்று பல்வேறு ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி 2-1 என்ற கணக்கில் வென்றது. கேப்டவுனில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டியின் கடைசி நாளில் ஆட்டத்தை தோல்வியில் முடிக்கக் கூடாது என்று தென்னாபிரிக்க வீரர்கள் போராடிக் கொண்டிருந்தபோது, அவுஸ்ரேலிய வீரர்களின் மோசமான நடத்தை நன்கு வெளிப்பட்டது.


அணியை திறமையுடன் வழிநடத்த வேண்டிய கப்டன் கிளார்க்கே, ஒருகட்டத்தில் நடுவரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டது அவுஸ்ரேலிய இரசிகர்களை முகம் சுழிக்க வைத்தது.

அந்த அணி வீரர்களின் நடத்தை குறித்து நியூஸ் லிமிடெட் கிரிக்கெட் எழுத்தாளர் ரொபர்ட் கிரடாக் கூறுகையில், அவுஸ்ரேலிய அணியை முதலிடத்துக்குக் கொண்டு வரும் பொறுப்பு பயிற்சியாளர் டரன் லீமேனுக்கு உண்டு. அதேசமயம், அவருக்கு உள்ள அடுத்த சவால், அணி வெற்றி பெறும்போது வீரர்களைக் கட்டுப்படுத்துவதுதான் என்று தெரிவித்துள்ளார்.

தங்களது அணி சிறப்பாக விளையாட வேண்டும் என்றுதான் அவுஸ்ரேலிய இரசிகர்கள் விரும்புகின்றனர். ஆனால், தென்னாபிரிக்க அணிக்கெதிரான வெற்றியின்போது சமூக ஊடகங்களில் அவுஸ்ரேலிய வீரர்களின் நடவடிக்கை குறித்து கடும் அதிருப்தி வெளியானது, அணியின் வெற்றி தங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை எனும் வகையில் தெளிவுபடுத்தியது.

முக்கியமான கட்டத்தில் தெனனாபிரிக்காவின் டூபிளிசர் ஆட்டமிழந்து வெளியேறும்போது அவுஸ்ரேலிய வீரர்கள் நாயைப் போல ஊளையிட்டதாகக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இது போல அவுஸ்ரேலிய வீரர்கள் நடந்து கொண்டது சிறுபிள்ளைத்தனமானது என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் தலைமை செயல் அலுவலர் ஜேம்ஸ் சதர்லாண்ட் சுட்டிக்காட்டினார்.

## உலகக் கிண்ண கால்பந்து; மெஸ்சிக்கு சோதனை



உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் மெஸ்சிக்கு மிகப்பெரும் சோதனை தான். இதில் பிரேசிலை வீழ்த்துவது தான் சிறந்த பழி வாங்குதலாக இருக்கும் என ஆர்ஜென்ரீன கால்பந்து ஜாம்பவான் மரடோனா தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்ரீன அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி, சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை, 2009 முதல் 2012 வரை என, தொடர்ந்து நான்கு ஆண்டுகள் வென்றவர்.

ஆர்ஜென்ரீன அணிக்கு கப்டனாக இருந்த போதும், இவரது தலைமையில் உலக கோப்பை வென்றதில்லை. இம்முறை பிரேசிலில் நடைபெறவுள்ள உலக கோப்பை தொடரில், ஆர்ஜென்ரீன அணி, நடப்பு சம்பியன் ஸ்பெயின், ஜேர்மனி, பிரேசில் போன்ற வலுவான அணிகளை வீழ்த்தி, கோப்பை வெல்வது கடினம் தான் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து 1986 இல் ஆர்ஜென்ரீன அணிக்கு உலக கோப்பை வென்று கொடுத்த மரடோனா குறிப்பிடுகையில், உலகின் சிறந்த வீரராக மெஸ்சி இருக்க வேண்டும் எனில், உலக கோப்பை வென்று தான் ஆகவேண்டும் என, எந்த கட்டாயமும் இல்லை. ஒருவேளை அப்படி நடந்து விட்டால், அது ஆர்ஜென்ரீனாவுக்கும், இரசிகர்களுக்கும் பெரிய மகிழ்ச்சியாக இருக்கும்.ஆனால், உலக கோப்பை வென்றாலும், இல்லையென்றாலும் மெஸ்சியின் தற்போதைய சாதனைகளே சிறப்பானவைகள் தான். கடந்த 2010 உலக கோப்பை தொடர் காலிறுதியில், 0-4 என, ஆர்ஜென்ரீன அணி தோற்றது. அப்போது சோகமாக இருந்த மெஸ்சியிடம், அவர்களை பழி வாங்க இன்னும் நிறைய உலக கோப்பை தொடர்கள் உள்ளன, என்று ஆறுதல் படுத்தினேன். இருப்பினும், நாடு திரும்பிய போது, தலையை கவிழ்ந்து அழுது கொண்டு தான் வந்தார்.இம்முறை, ஸ்பெயின், ஜேர்மனி அணிகள் வலுவான வீரர்களை கொண்டுள்ளது. பிரேசில் அணியை எடுத்துக் கொண்டால், 6 முதல் 7 வீரர்கள் தற்காப்பு ஆட்டத்தில் வல்லவர்கள். தாக்குதல் பாணியில் இளம் வீரர் நெய்மர் மிரட்டுகிறார்.இதனால், இத்தொடர் மெஸ்சிக்கு மிகப்பெரும் சோதனை தான். இதில் பிரேசிலை வீழ்த்துவது தான் சிறந்த பழி வாங்குதலாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர்



யாழ். சென். பொஸ்கோ எஸ்.பி




தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 17



வேலணை மத்திய கல்லூரி 21



பரந்தன் அ.த.க. பாடசாலை



சண்டிலிப்பாய் சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை




கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்



சுண்டிக்குழி மகளிர் கல்லூரி 20





மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

# தமிழ் தேசிய வாதிகள் கவனம்கொள்ள வேண்டிய வன்னி மக்களின் அதிருப்திகள்

– எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.



தமிழ் பேசும் மக்கள் எனும் பரந்துபட்ட ஒரு சொல்லாடலை அடிப்படையாக கொண்டு கட்டமைக்கப்பட்டதே தமிழ் தேசியம் ஆகும். இந்த தமிழ் தேசியமே இந்த மக்களின் விடுதலைக்கு அடிப்படையான கோட்பாடு என கடந்த பல தசாப்தங்களாக எமது மக்களும் நம்பிக் கிடக்கிறார்கள். இதன் பொருள் சாதி, மத, பிரதேச பாலின மற்றும் இத்தியாதி இத்தியாதி வேறுபாடுகள் ஏதுமின்றி தமிழ் என்னும் மொழியின் பெயரில் நாம் சமத்துவமாக கூடி வாழ்வோம் என்பதே ஆகும்.

அப்படியானால் எமது தமிழ் தேசிய விடுதலைக்கு வழிகாட்டும் தலைவர்கள் இந்த சமத்துவத்தை நோக்கி செயற்பட வேண்டுமல்லவா? சுமார் ஐம்பது அறுபது ஆண்டுகாலமாக தமிழ் தேசியம் பேசும் நமது பெரிசுகள் இந்த ஒற்றுமையை நோக்கி என்னென்ன செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்?

தேர்தலின் போது தமிழர்களை ஒன்றாக அணிதிரட்டுவது மட்டுமே தமிழர்களிடம் ஒற்றுமையையும் சமத்துவத்தினையும் நிலைநாட்டிவிடும் என்று நாம் நம்பலாமா? அதன் பின்னர் ஏழைகளும், பாமரர்களும், சாமானியர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் எல்லாமும் பெற்று வாழும் வரங்களை பெற்றவர்களாகி விடுகிறார்களா? நிச்சயமாக அப்படியொரு அதிசயமும் இதுவரை நிகழ்ந்ததும் இல்லை. இனி நிகழப்போவதுமில்லை.

வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் இதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் அதுவே நமது மக்களின் விடுதலைக்கான ஒரே வழியென்ற பிரசாரங்கள் வானைப்பிளந்தன. அதன் படியே மக்களும் ஒழுகினர். ஒற்றுமையின் பெயரால் ஒன்றாகிய மக்கள் இன்று ஒன்றாக நடாத்தப்படுகிறார்களா? வன்னி பெருநிலப்பரப்பு போர் தின்ற பிரதேசம். அங்கு வாழும் மக்கள் வஞ்சிக்கப்பட்ட மனிதர்கள். வடமாகாணசபை ஆட்சி அந்த மக்களுக்கு இதுவரை என்ன செய்தது? என்றால் யாரிடம் என்ன பதில் உண்டு?

மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் பெற்று அதிகாரத்துக்கு வந்துள்ள சில அரசியல்வாதிகள் சமூகத்தில் நிலவும் படிநிலை ஏற்றத்தாழ்வுகள் பாரபட்சங்கள் போன்றவற்றை பாதுகாக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஒரு அதிகாரம் மிக்க பதவிக்கோ சமூக அந்தஸ்து மிக்க இடத்துக்கோ யார் யார் நியமிக்கப் படவேண்டும் என்பதில் இந்த மேலாண்மைவாதம் செல்வாக்கு செலுத்துவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அதே போன்று கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித்தியாலயத்திற்கு உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர்களை நியமிக்குமாறு பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாகாண கல்வி அமைச்சரை கேட்டதற்கு அவர் ஆசிரியர்களை வழங்குவது சிரமமாக உள்ளதாகவும் மாணவர்களை வேறு பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் அல்லது முழங்காவில் பாடசாலைக்கு செல்லுமாறும் பணித்திருக்கிறார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக அதே ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லை என்று சொல்வதற்கு ஒரு அமைச்சர் தேவையில்லை. என தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் தேவைக்கதிகமாக ஆசிரியர்கள் உள்ள நிலையில் அதனை வன்னி மக்களுடன் பங்கிட்டுக்கொள்ள அவர்களுக்கு மனமில்லை. பின்தங்கிய பிரதேச மாணவர்கள் முன்னிலைக்கு வந்துவிடக் கூடாது என்ற அவர்களின் அடி மனப்பதிவுகளின் செயற்பாடுகளே அவை எனவும் தெரிவித்துள்ளமை முக்கியமானது.

உண்மையில் வன்னிமக்களின் உபாதைகளில் குளிர் காய்ந்து பதவிகளில் அமர்ந்து விட்ட இந்த கூட்டமைப்பினர் இவற்றுக்கு முடிவுகட்ட வேண்டும். அந்த மக்களை இப்படி மாற்றாந்தாய் மனோ நிலையில் நடாத்துவது முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் வட மாகாணத்துக்குள்ளேயே உள்ள வன்னிக்கு போகமாட்டேன் என்றால் அதை கேட்டு மௌனம் காக்கிறதாம் வட மாகாணசபை. காரணம், இந்த வாத்திமார்தானாம் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரகர்களாக முன்னின்று செயல்பட்டவர்கள். இதுதான் தமிழரின் ஆட்சியின் இலட்சணம். இந்த கோதாரி மாகாணசபை வரமுன்பு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் போன்றவர்களின் முயற்சியில் மத்திய கல்வியமைச்சர் ஊடாக பல வேலைத் திட்டங்கள் கிளிநொச்சியில் கல்வி வளர்ச்சிக்காக செயற்படுத்தப்பட்டுள்ளது.

இப்போ கல்வியதிகாரம் என்பது மாகாண சபைகளுக்கு உட்பட்டதால் அந்த சந்தர்ப்பங்களும் மறுக்கப்பட்டுவிட்டன. தமிழருக்கு கிடைத்த கல்வியதிகாரம் இப்படித்தான் செயல்படுமென்றால் எதற்கு இந்த அதிகாரங்கள்?

இந்த வன்னி மக்களின் அதிருப்திகள் சிறுசிறு விடயங்கள் அல்ல. தமிழ் தேசிய தலைமைகள் என்று தங்களை சொல்லிக் கொள்பவர்கள் கவனம் கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சினைகள். உண்மையிலேயே தமிழ் தேசியம் என்று பேசுகின்ற ஒவ்வொருவரும் இந்த வன்னிப் பிரதேசத்தின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டுக்கும், அந்த மக்களுக்கு மறுக்கப்படுகின்ற சமூக நீதிக்குமாய் குரல் கொடுக்க முன்வரவேண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட மாகாணத்தின் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று கும்பலோடு கோவிந்தா போட்ட அனைவருக்குமான கடமையது.

# சிவாஜியும் சாவித்திரியும்!

- ஒய்.ஜி.மகேந்திரன் -



சிவாஜியிடம் உள்ள முக்கிய சிறப்பு என்னவென்றால், தன்னுடன் நடிக்கும் நடிகர், நடிகைகளுக்கு, தங்கள் நடிப்புத் திறனை வெளிப்படுத்த வாய்ப்பு கொடுப்பார். ஆனால், கடைசியில் ஏதாவது ஒரு புதுமை செய்து, பார்ப்பவர்களின் மொத்த கவனத்தையும், தன் பக்கம் இழுத்து விடுவார். இதற்கு பல உதாரணங்களை சொல்லலாம். பாசமலர் படத்தில், ஒரு காட்சியில், சிவாஜி வீட்டுக்கு வருவார். தோட்டத்திலே, அவரது தங்கை சாவித்திரியும், காதலன் ஜெமினி கணேசனும் பேசிக் கொண்டிருப்பர். பணக்காரருக்குரிய ஆணவத்தில், பீரோவிலிருந்து ரிவால்வரை எடுத்துக் கொண்டு, ஆவேசத்துடன் வேகமாக வருவார் சிவாஜி. அப்போது ஜெமினியிடம், “எங்க அண்ணாவை எதிர்த்து தான், வாழ்க்கை நடத்தணும் என்றால், அந்த வாழ்க்கை எனக்கு தேவையே இல்லை. அவரோட முழு சம்மதத்தோடு, ஆசிர்வாதத்தோடு, நாம் சேருவதை தான், நான் ஒத்துக் கொள்வேன்...“ என்று, சாவித்திரி சொல்வதை கேட்பார். பாசத்தில் கண்ணீர் வழியும்.

தான் கொண்டு வந்த ரிவால்வரை வைத்து, கண்ணீரை துடைக்கும் அந்த, ஒரு காட்சியிலேயே, தன் மன ஓட்டத்தை அழுத்தமாக காட்டியிருப்பார்.

சிவாஜியை பற்றி, குறிப்பிட வேண்டிய மற்றொரு விஷயம்... அவர் நடித்த பல படங்கள், ஹீரோயின்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட படங்கள். தன்னை விட கதாநாயகிக்கு தான், முக்கியத்துவம் அதிகம் என்று தெரிந்தும், முழு மனதோடு, நடிக்க ஒப்புக் கொள்வார்.

அந்த வரிசையில், கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் கை கொடுத்த தெய்வம், படம் முழுக்க முழுக்க நடிகை சாவித்திரியின் படம். அந்த மாதிரி படங்களிலும், தன் தனித்தன்மையை காண்பித்து, பார்வையாளர்களைத் தன் பக்கம் திருப்பி விடுவார் சிவாஜி.


நடிகை சாவித்திரிக்கு, நானும் மிகப் பெரிய விசிறி. என் மகள் மதுவந்தியின் திருமண நிச்சயதார்த்தத்திற்கு சிவாஜியை அழைக்க, அவர் வீட்டுக்கு சென்றிருந்தேன். “யார்ரா அந்த அதிர்ஷ்டக்கார மாப்பிள்ளை?” என்றார்.

“நடிகை சாவித்திரியின் பேரன்...” என்றேன். சிவாஜியின் முகம் மலர்ந்து, “ஓ, அப்படியா வெரி குட்...” என்றார்.

1964இல் ஏ.பி.நாகராஜனின் இயக்கத்தில், சிவாஜி ஒன்பது வேடங்களில் நடித்த, நவராத்திரி திரைப்படம் வெளியானது. நடிப்பில், முகபாவத்தில், பல கேரக்டர்களை வித்தியாசப்படுத்தி காண்பித்திருப்பார் சிவாஜி. சாவித்திரியை கைது செய்து, மருத்துவமனைக்கு அழைத்து வரும் காட்சியில், சிவாஜி மனநோய் மருத்துவராக வருவார்.

இரண்டு கைகளையும் பின்புறம் கட்டி, மெதுவாக நடந்து செல்லும் சிவாஜி, கருணை சிரிப்போடு, ஒரு நிலையில் நிற்பார் பின் திரும்பி வருவார். மேஜை மீது இருக்கும் ஸ்டெதஸ்கோப்பை லாவகமாக எடுத்து கழுத்தில் மாட்டி, திரும்பிப் போவார். அதாவது, வந்திருக்கும் பேஷன்ட் மனநிலை பாதிக்கப்பட்டவர் அல்ல, நல்ல நிலையில் இருப்பவர் தான் என்பதை, டயலாக் எதுவும் பேசாமல், தன் நடையாலேயே வெளிப்படுத்தி, ரசிகர்களின் கைதட்டலை வாங்கி விடுவார்.

# அழகுக்



● முழுநெல்லிக்காயை அரைத்து, தேங்காய் எண்ணெயுடன் கலந்து கொதிக்க வைத்து வடிகட்டி தேய்த்து வந்தால் தலைமுடி கருமையாகும்.

● வேப்பிலையைச் சிறிதளவு நீரில் நன்கு வேகவைத்து ஒரு நாள் கழித்து இந்த நீரைக் கொண்டு தலை அலசி வந்தால் முடிகொட்டுவது நிற்கும்.

● ஒலீவ் எண்ணெயுடன் தேன் மெழுகும், பன்னீரும் கலந்து தடவி வந்தால் உதடுகள் சிவப்பாகவும் மென்மையாகவும் மாறும்.

● பசளிக்கீரையை விழுதாக அரைத்து தலையில் தடவி சிறிது நேரம் ஆறவிட்டு குளித்தால் கேசம் புதுப் பொலிவு பெறும்.

● 100 கிராம் வறுத்த கசகசாவை வெந்நீரில் ஊறவிடவும். மறுநாள் பாலிலிட்டு அரைத்து, முகத்தில் “பேக்” போல போட்டுப் பாருங்கள். மாசு மறு எல்லாமே சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடும்.

# தமிழினத்தின் ஏழு மண்டேலாக்கள்

– சமஸ் கட்டுரையிலிருந்து.


ஒரு நாளைக்கு 10 பத்திரிகைகள் படிக்கலாம்; மணிக்கொரு முறை இணையத்தில் முக்கிய செய்தித்தளங்களைச் சுற்றி வரலாம்; 24 மணி நேர செய்தித் தொலைக்காட்சிகளை ஓட விட்டு வேலைக்கு நடுவே நிமிஷத்துக்கு நிமிஷம் எட்டிப் பார்க்கலாம். ஆனால் தமிழ்நாட்டின் அரிய செய்திகளை அளிப்பதில் சுவரொட்டிகளுக்கு ஈடுஇணை இல்லை. தமிழ்நாட்டுக்கு ஏழு மண்டேலாக்கள் கிடைத்த செய்தியும் சுவரொட்டிகள் மூலம்தான் கிடைத்தது. சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தின் நீண்ட சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகள் மூலம்.

சர்தேசாய்களும் தமிழர்களை இன வெறியர்களாகச் சித்தரித்துக் கத்தும்போது, வேகமும் கோபமும் வரத்தான் செய்கிறது. ஆனால், நம் ஆட்கள் அடிக்கும் கூத்துகளை வெளியிலிருந்து பார்க்கும் ஒருவருக்கு வேறு எப்படித் தோன்றும்?

விடுதலைப் படையைச் சேர்ந்த புல்லரின் கதை ஒப்பீட்டளவில் இன்னும் நமக்கு நெருக்கமானது. 2001இல் மரண தண்டனை விதிக்கப்பட்ட புல்லரின் கருணை மனுவை 10 ஆண்டுகளுக்குப் பின் நிராகரித்தார் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல். சீக்கியர்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். இப்போது புல்லருக்கு ஏற்பட்டிருக்கும்

சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கலாம் என்று பரிந்துரைத்திருப்பதும் தமிழக அரசு விடுவிக்க முடிவெடுத்திருப்பதும் மனிதாபிமான அடிப்படையில்தானே தவிர, அவர்கள் நடந்த குற்றத்தோடு துளியும் தொடர்பற்றவர்கள் என்கிற அடிப்படையில் அல்ல.

இத்தனை நாட்களும் அப்பாவிகள் என்று கூறியே அவர்கள் விடுதலையைக் கோரினோம். இப்போது தியாகிகள் என்கிறோம். எனில், அவர்களை யாரென்று அடையாளப்படுத்துகிறோம்? பேரறிவாளன் தூக்குக் கயிற்றின் முன் நின்றபோது, கூக்குரலிட்டோம். அப்சல் குருவின் குரல்வளை நெரிபடும்போதோ, வாய் மூடி. முகம்



Santhan Murugan Arivu Nalini Robert Payas Ravi Jayakumar

### யார் இந்த ஏழு மண்டேலாக்கள்?

வேறு யாராக இருக்க முடியும்? ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, மரண தண்டனையிலிருந்து தப்பி, 23 வருஷ சிறை வாசத்திலிருந்து விடுபட ஏங்கிக் கொண்டிருக்கும் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் ஃபயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய எழுவர்தான் அந்த ஏழு மண்டேலாக்கள். இவர்கள் எப்படி, எப்போது மண்டேலா ஆனார்கள் என்ற கேள்வி இங்கு பொருத்தமற்றது. ஏனென்றால், மண்டேலா மறைந்தபோது அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம் என்ற பெயரில், "இன்விக்டஸ்" படத்தில், மண்டேலாவாக நடித்த மோர்கன் ஃப்ரீமேன் படத்தைப் போட்டு அஞ்சலி செலுத்திய வரலாறு நம்முடையது. எனினும் மனித மேரி மாதாக்கள், வாழும் வள்ளுவர்கள், சமகால சே குவேராக்கள் வரிசையில் ஏழு மண்டேலாக்களையும் சேர்க்க முடியுமா?

தேசியத் தொலைக்காட்சிகளில், அர்னப் கோஸ்வாமிகளும் ராஜ்தீப்

### மனிதாபிமானமா, இன அரசியலா?

பஞ்சாபில் 1995இல் அன்றைய முதல்வர் பியாந்த் சிங் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மாற்று மனித வெடிகுண்டாக வந்தவர் பல்வந்த் சிங் ரோஜனா. பாப்பர் கால்ஸா இயக்கத்தைச் சேர்ந்தவர். இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தானாக முன்வந்து வாக்குமூலம் அளித்தவர். 2007இல் சி.பி.ஐ. நீதிமன்றம் ரோஜனாவுக்கு மரண தண்டனை விதித்தபோது மேல்முறையீட்டு வாய்ப்பை மறுத்தவர். ரோஜனாவுக்கு ஆதரவான சீக்கியர்களின் தொடர் போராட்டங்கள், பஞ்சாபின் செல்வாக்குமிக்க அமைப்பான சிரோமணி குருத்வாரா பிரபந்தக் குழு தாக்கல்செய்த கருணை மனு, முதல்வர் பிரகாஷ் சிங் பாதலின் நேரடி முறையீடு ஆகியவற்றின் தொடர்ச்சியாக ரோஜனாவின் மரண தண்டனையை நிறுத்திவைத்திருக்கிறது அரசு.

1993இல் டில்லியில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் மணீந்தர்ஜித் சிங் பிட்டா கொலை வழக்குக் குற்றவாளியான காலீஸ்தான்

மனநல பாதிப்பு மற்றும் கருணை மனு, பரிசீலனைக் கால தாமதம் ஆகிய காரணங்களுக்காக புல்லரின் மரண தண்டனையை நிறுத்திவைத்திருக்கிறது உச்ச நீதிமன்றம்.

மரண தண்டனை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டியது சரி. ஆனால், மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவதாலேயே ரோஜனாவும் புல்லரும் குற்றமற்றவர்கள் ஆகிவிடுவார்களா? தனி சீக்கிய மாநிலம் கோரும் குழுக்கள், "சீக்கிய தேசத்தை நோக்கிய பயணத்தின் முதல் வெற்றி" என்று ரோஜனா, புல்லர் விவகாரங்களைக் கொண்டாடுகின்றன. இதற்கும் "எழுவர் விடுதலை, தமீழீழ விடுதலை நோக்கிய பயணத்தின் முதல் வெற்றி" என்ற கொண்டாட்டத்துக்கும் என்ன வேறுபாடு?

### அப்பாவிகளா, போராளிகளா?

இந்தியாவின் மோசமான அரசியல் படுகொலைகளில் ஒன்று ராஜீவ் படுகொலை. நீதிமன்றம் இதில்

திருப்பி நின்றோம்.

"என் தாய் - தந்தை கையால் சாப்பிடக் காத்திருக்கிறேன்" என்கிற அரித்ரா குரல் நமக்கு வலிக்கிறது. "என் தந்தையை இழந்தேன். இனி, அவர் திரும்பிவரப்போவதில்லை. ஒரு முன்னாள் பிரதமரான என் தந்தைக்கே நீதி கிடைக்கவில்லை என்றால், இந்நாட்டின் சாமானியனுக்கு எப்படி நீதி கிடைக்கும்?" என்கிற ராகுல் குரலின் வலி கேலிக்குரியதாகிறது என்றால், நாம் யார்?

நேற்றுவரை யாரும் மரண தண்டனையின் பெயரால் கொல்லப்பட்டுவிடக் கூடாது என்று இங்கு கூட்டங்கள் நடந்தன. அதுவே அஹிம்சை என்றோம். இன்றைக்கு, ராஜீவ் கொல்லப்பட்டிருக்கக் கூடாது என்று அவருடைய கட்சியினர் கூட்டங்கள் நடத்தும்போது, அவர்களை நோக்கிக் கல் வீசப்படுகிறது; ராஜீவ் சிலைகளின் முகம் சிதைக்கப்பட்டு, தலை தகர்க்கப்படுகிறது. எனில், நாம் சொல்ல விழைவதுதான் என்ன?

---

## குறிப்புகள்

● சிலருக்கு முழங்கைகள் கறுப்பாக இருக்கும். தினமும் எலுமிச்சம் பழ மூடியால் முழங்கைகளைத் தேய்த்து வர நாளடைவில் கருமை நீங்கிவிடும். சருமமும் மென்மையாகும்.

● நெல்லிக்காயைக் கொட்டை நீக்கி, எலுமிச்சை இலையுடன் விழுதாக அரைத்து, பசும்பாலில் கலந்து தலைக்குத் தேய்த்து வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து வர நரைமுடி கறுப்பாகிவிடும்.

● இஞ்சியைத் தோல் சீவி சுத்தம் செய்து சிறுதுண்டுகளாக நறுக்கி 5 நாட்கள் தேனில் ஊற வைக்கவும். இதிலிருந்து தினமும் ஓர் இஞ்சித்துண்டை சாப்பிட்டு வர, சரும சுருக்கங்கள் நீங்கிவிடும்.

---

## நோய் தீர்க்கும் இசை!


முத்துசாமி தீட்சிதர் இசையில் பாண்டித்தியம் பெற்றிருந்ததுபோலவே ஜோதிடத்திலும், மந்திர தந்திரங்களிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஒருமுறை அவருடைய சீடரான சுத்தமங்களம் தம்பியப்பருக்கு கொடிய நோய் ஒன்று ஏற்பட்டது. புகழ்பெற்ற ஜோதிடர் ஒருவர் நவக்கிரகங்களுக்கு வேதிய முறைப்படி சில வேள்விகளைச் செய்தால் மட்டுமே அந்த நோயின் பிடியிலிருந்து விடுபட முடியும் என்று அவருக்குச் சொல்லிவிட்டார். பிராமணரல்லாத அவர் அந்த ஜோதிடர் சொன்ன வேள்விகளைச் செய்ய வழியில்லாமல் திகைத்தார்.

ஆனால் முத்துசாமி தீட்சிதர் அதற்கு ஓர் அருமையான வழியைக் கண்டுபிடித்தார். அந்த நவக்கிரகங்களின் தனித்தனி தன்மைகளுக்கு ஏற்றதாகவும் தேவைப்பட்ட விசேஷ மந்திரங்கள் இருக்கும்படியாகவும் நவக்கிரகக் கிருதிகளை இயற்றினார். அந்த நவக்கிரகக் கிருதிகளைப் பாடினால் அது அந்த வேள்விகளுக்கு ஒப்பானதாக இருக்கும் என்றும் உறுதியுடன் சொன்னார்.

தம்பியப்பரும் அவர் சொன்ன கிருதிகளைப் பக்தியுடன் கனிந்து பாடி அந்த நோயின் பிடியிலிருந்து விலகினார்.

தான் கற்றவை அனைத்தையும் மனித குலத்தின் நன்மைக்காகப் பயன்படுத்த முடிந்த அவருடைய பாண்டித்தியம் உண்மையில் பாராட்டத்தக்கதே அல்லவா? அந்த நவக்கிரக கிருதிகளில் ராகு, கேது கிரகங்களுக்கான கிருதிகளை முத்துசாமி தீட்சிதர் பாடவில்லை என்றும் அவை இரண்டும் பிற்காலத்தினரால் பாடப்பட்டவை என்றும் சொல்பவர்களும் உண்டு. ஆனால் சுத்தமங்களம் தம்பியப்பர் தன் குருவின் கிருதிகளைப் பாடி நோயின் பிடியிலிருந்து விடுபட்டார் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.

('சங்கீத மும்மூர்த்திகள்!' என்ற நூலில் என். கணேசன்)



# நிகழ்வுகளின் பதிவுகள்....




பொலிகையூர் கணேசமூர்த்தி விஜியந்தனின் மருதாம்புலத்தரசி பக்திப்பாதார கானங்கள் இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் பொலிகண்டி பத்திரகாளியம்பாள் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்படுவதையும், பாடலாசிரியர் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (116)






வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிவராத்திரி விழா அண்மையில் இடம்பெற்றபோது அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வையும், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பரிசில் வழங்குவதையும் காணலாம்.





இலங்கை வங்கியின் கொடிகாமம் கிளை தனிக்கிளையாக தரமுயர்த்தப்பட்டு அதன் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது... (130)





விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றபோது... (பா)




மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டமளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் பட்டமளிப்பதையும் கலந்து கொண்ட விருந்தினர்களையும் காணலாம். (137)

# போக்குவரத்து சேவையை விரிவுபடுத்த கோண்டாவில் சாலை மேம்படுத்தப்படும்

## அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவிப்பு



இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கென மேலும் புதிய பேருந்துகளையும் அதற்கான ஆளணிகளையும் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் நலன்புரிசங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழியர் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடையும் அதேவேளை, இது நல்லதொரு முயற்சியுமாகும். முக்கியமாக இச்சாலையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுச் செல்பவர்களை கௌரவப்படுத்துவதோடு இங்கு பணியாற்றுபவர்களது பிள்ளைகளை ஊக்குவித்து பரிசில்கள் வழங்குவதும் முக்கியமானதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும். எனவும் அவர் தெரிவித்தார்.

இங்கு பணியாற்றும் பணியாளர்கள் தமது மாதாந்த சம்பளத்தை உரிய காலங்களில் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் துறைசார்ந்தோர் ஊடாக முன்னெடுக்கப்படும். அதற்கு எல்லோரது பங்களிப்பும், ஒத்துழைப்பும் அவசியமானது.

நீங்கள் எல்லோரும் உண்மைத்தன்மையுடன் மக்களுக்கான சேவைகளை செய்வதோடு இச்சாலையின் மேம்பாட்டுக்காகவும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

இச்சாலையை மென்மேலும் மேம்படுத்தும் வகையிலும் மக்களுக்கான சேவைகளை விரிவுபடுத்தும் வகையிலும் புதிதாக பேருந்துகளை தருவிப்பதற்கும் அதற்கான ஆளணிகளை நிரப்புவதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

நிகழ்வில் கோண்டாவில் சாலை முகாமையாளர் குணபாலசெல்வம் உரையாற்றும் போது, 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகவும் சேதமடைந்திருந்த நிலையில் காணப்பட்ட யாழ். மத்திய பேருந்து நிலையத்தை அழகுற மிகச் சிறந்த முறையில் மாற்றியமைத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. தற்போது நாட்டிலுள்ள பேருந்து தரிப்பிடங்களில் மிகவும் சிறந்த நிலையமாக யாழ்ப்பாண பேருந்து நிலையம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மக்கள் மீது மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ள அமைச்சர் மக்களுக்கு அளவுக்கு அதிகமான சேவைகளை செய்தது மட்டுமல்லாமல் வடபகுதியின் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுப்பதில் சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்ட வழிகாட்டியாகவும் விளங்கி வருகின்றார் என்றும் தெரிவித்தார்.

# தொண்டைமானாறு வீதி புனரமைப்பு 2 வாரமாகியும் முற்றுப்பெறாத நிலை

## – சீற்றத்துக்கு உள்ளாகும் மக்கள்

(அச்சுவேலி)


அச்சுவேலி - தொண்டைமானாறு பிரதான வீதியினை செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 02 வாரங்களுக்கு மேலாகியும் ஆரம்பக் கட்ட வேலைகளுடனேயே அவ்வீதி காணப்படுவதால் பாதசாரிகள் உள்ளிட்ட பயணிகள் அவ்வீதியால் செல்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்படி வீதியினை செப்பனிடுவதற்காக ஆவரங்கால் சந்திப்பகுதியில் இருந்து வீதியின் இரண்டு ஓரங்களும் கனரக இயந்திரங்களின் உதவியுடன் கிளறிவிடப்பட்டிருந்தது. எனினும் இருவாரங்களுக்கு மேலாகியும் எந்தவொரு வேலையும் இடம்பெறாமையினால் வீதி ஓரத்திலிருந்து கிளறப்பட்ட மண் வாகனங்கள் செல்லும் போது வீதியினைத் தெரியாத அளவிற்கு புழுதி மண்டலத்தை உருவாக்கி வருகிறது. இவ்வழியால் செல்லும் பயணிகள் உள்ளிட்ட பாடசாலை மாணவர்கள் உடையில் புழுதி படிந்த நிலையிலேயே செல்ல வேண்டிய நிலை காணபபடுவதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே தொடர்ந்தும் இந்நிலை நீடிக்க இடமளிக்காது அவ்வீதியினை செப்பனிட்டு விரைவில் சீரான போக்குவரத்திற்கு அதிகாரிகள் வளிசமைத்துக் கொடுக்க வேண்டும் என பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நலன்புரிசங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவு

ஊர்காவற்றுறை பிரதேசசபை 'ஊழியர் நலன்புரிசங்கத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாக சபைத்தெரிவு அண்மையில் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாக சபையின் தலைவராக ப.குகனேசன்,உபதலைவராக க.இரவீந்திரன்,செயலாளராக மு.செந்தூரன்,உபசெயலாளராக சு.சுனந்தன்,பொருளாளராக கு.சிவனேசன் ஆகியோரும் உறுப்பினர்களாக செல்வி.ஏ.கார்த்திகாயினி, வெ.ஜெயரூபன், ம.வித்தியாதரன், த.திருச்செந்தூரன், கு.சந்திரகுமார், இ.ராஜ்பாரதி ஆகியோரும் கணக்காய்வாளராக செல்வி. லீ.யூட்சியும் தெரிவுசெய்யப்பட்டனர்.



காரைநகர் கசூரினா தீர்த்தக் கரையில் எழுந்தருளியுள்ள ஆதி விஜய ஆஞ்சனேயர் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவின் போது சுவாமி கடலில் ஊர்வலமாக சென்று தீர்த்தமாடுவதைக் காணலாம். (50)




## வேலை வாய்ப்புச் செய்திகள்

எமது பிரசித்தி பெற்ற பிரதான நிறுவனங்களுக்கு O/L, A/L சித்தி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கணனி இயக்குநர் எழுத்தாளர் ஆண் பெண் கணக்காளர் Sales Rep,and பயிற்சி Selas Rep Marketing பரிபாளர்கள் Call Center வயது 18-30 வரை சம்பளம் 20,000 முதல் தொடர்புக்கு 0775742738, 0113056242.

---

கல்வி அறிவு உள்ள, இல்லாத அனைவருக்கும் நிரந்தர வேலை வாய்ப்புகள் தொழிலின் அடிப்படையில் 38,000 வரை சம்பளம் மாத்தளை, கண்டி, பொல்கொல்ல, குண்டசாலை, பல்லேகலை, திகன, குருநாகல், பன்னல, நிட்டம்புவ, ரத்மலான , பிலியந்தலை, மற்றும் கொழும்பை அண்மித்த பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் ஜேம், பிஸ்கட், கோடியல், யோகட், கிளவுஸ், செம்போ, உற்பத்தியில் லேபல், பெகிங், தரம் பிரித்தல்களுக்கு வயது 18-55 ஆண்,பெண் தேவை. உணவு தங்குமிடம் உண்டு நண்பர் குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் வரும் நாளிலேயே வேலைக்குச் செல்ல முடியும். தொடர்புக்கு 0776837995.

---

குறைந்த நேர வேலை அதிஉயர் சம்பளம் 18,000,28,000,36000 (ஜேம், கோடியல், சொக்லேட், பால்மா, புத்தகம், சோயா, நூடில்ஸ், கார்சில்ஸ், கீல்ஸ், ஆர்ப்பிகோ, பிளாஸ்டிக், டயர், தேயிலை போன்ற உற்பத்தி லேபல் Loading/Unloading, Delivery பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. உணவு தங்குமிட வசதி செய்து தரப்படும். (மட்டக்குளிய, நாராஹேனபிட்டிய, பியகம. வத்தளை, நீர்கொழும்பு, பாணந்துறை, மொரட்டுவ, பேலியகொடி, கிரேண்ட்பாஸ், யாழ்ப்பாணம், நுவரெலியா. மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, புத்தளம்) 0778430179.

---

கொழும்பில் இயங்கும் கடைக்கும் நிறுவனத்துக்கும் ஆண் சேவையாளர்கள் தேவை. சம்பளம் 19,000 Commission உண்டு தனி அறைகள் கொண்ட தங்குமிடம் இலவசம் தொடர்புக்கு 0777674194.

---

உண்மையான சம்பளம் இதோ! 32,000 உயர்வான மாதச்சம்பளம், உணவு, தங்குமிட வசதி இலவசம். ஐஸ்கிரீம், ஜேம், டொபி, தொழிற்சாலைகளில் வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு 18-55 ஆண், பெண் 0729558290, 0354934049.

---

வாழ்க்கை வருமானத்தை உயர்த்திக் கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும் பிரபல தொழிற்சாலைகளில் ஜேம், டயர், குளிர்பானம், சொசேஜஸ், பிளாஸ்ரிக், தேயிலை சோயா, சொக்லேட் போன்ற உற்பத்தி, லேபல், பொதியிடல் Delivery பிரிவுக்கு 18-50 வயதினர் ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000-25.000-32.000 உணவு தங்குமிட வசதி செய்து தரப்படும். (மட்டக்குளிய பேலியாகொட, வத்தளை, ஜாஎல, கந்தானை, இரத்மலானை, காலி, களுத்துறை, ஹொரண, மொரட்டுவ பாணந்துறை நாராஹென்பிட்டிய நீர் கொழும்பு, களனி பியகம சம்புகஸ்கந்த பிலியந்தலை, அவிசாவளை, இரத்தினபுரி தெனியாய) 0778430179. கொழும்பு.

---

வயதான இருவருக்கு தங்கியிருந்து நாளாந்த உதவிகள் செய்வதற்கு இரண்டு ஆண், ஒரு பெண் உள்ள தமிழ் கதைக்கத்தெரிந்த ஒரு குடும்பம் உடனடியாகத் தேவை. சம்பளம் 50,000 உடன் ஏனைய வசதிகளும் தரப்படும் 0766689202.

---

நிரந்தர தொழில் உங்களுக்காக (கண்டி, கொழும்பு, ஹட்டன் இரத்தினபுரி, பண்டாரவெல, பதுளை, வவுனியா, மட்டக்களப்பு எமது ஆட்சேர்ப்பு நிலையங்கள்), பிரதான தொழிற்சாலைகளான கோயல், சொக்லேட் பால்மா PVC கிளவுஸ் விமானநிலையம், துறைமுகத்தில் கிளினிங், கேட்டரிங், லொன்றி, காகோ, வெல்டிங், பெயின்டர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், காப்புறுதி நிறுவனங்கள் போன்ற பிரிவில் வெற்றிடங்கள் உண்டு, தங்குமிடம் செய்து தரப்படும். சம்பளம் 18,000,25,000, 35,000 வரை வருகைதரும் நாளிலே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். 0778508118.

# சங்கானை மீன் சந்தை நிர்மாணம் நம்பிக்கையூட்டும் நடவடிக்கை

## 32 மில்லியன் செலவில் கட்டடம்

(வலி.மேற்கு)

வலி.மேற்கில் நெல்சிப் திட்டத்தின் கீழ் மீன்சந்தை அமைப்பதற்கான அனுமதியை சகல திணைக்களத்திடம் இருந்து நாடாளுமன்றஉறுப்பினரும்-வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான முருகேசு சந்திரகுமார் பெற்று ஒருங்கிணைத்துள்ளார்.

இதனையடுத்து வடமாகாண உள்ளூராட்சி திணைக்களம் வலி.மேற்கில் நவீன வடிவிலான மீன் சந்தை விரைவில் 32 மில்லியன் ரூபாவில் அமைக்கப்படவுள்ளது. புதிய மீன்சந்தை அமைப்பதற்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது இயங்கிவரும் மீன்சந்தை நகர அபிவிருத்திக்கும் சுற்றாடலுக்கும் நிறுவன அபிவிருத்திக்கும் பொருத்தமற்றது. என இனங்காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் வலி.மேற்கு பிரதேச சபை புதிய மீன்சந்தை அமைக்க காணியைபல்வேறு இடங்களிலும் தேடிவந்தது.

இந்நிலையில் சங்கானை பட்டின அபிவிருத்தி சபை மீன் சந்தை அமைப்பதற்கான 7 அரைப் பரப்புக் காணியை சங்கானை இத்தியடியில் நன்கொடையாக வழங்கி பேருதவி செய்தது.

இதனையடுத்து 2014 இல் புறநெகும திட்டத்தின் கீழ் புதிய மீன் சந்தை நவீன வடிவில் அமைப்பதற்கான துரித நடவடிக்கையினை உள்ளூராட்சி திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## மின்சார உற்பத்தி மீண்டும் சரிவு

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற வறட்சி காரணமாக, நீர்மின் உற்பத்தி 18 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் இதுவரையில் மழைவீழ்ச்சி பதிவாகவில்லை என இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான செனஜித் தசநாயக தெரிவித்துள்ளார்.

அனல் மின் உற்பத்தி நிலையங்களில் அதிகபடியான மின் உற்பத்தி மேற்கொள்வதால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறும் மின்சாரசபையின் பிரதி பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்

# முளைவிடும் உள்ளக முரண்பாடு களைந்து எறிய மகிந்த முயற்சி

(கொழும்பு)

ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கிடையே அண்மைக்காலமாக உருவாகிவரும் முரண்பாடுகளை அகற்ற விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர்களுக்கு இடையிலான மோதல்கள் முரண்பாடுகளை களைய மூன்று சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட விசேட குழு ஒன்று உருவாக்கப்பட உள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தக் குழுவினை நியமிக்கவுள்ளார்.

அமைச்சர்களுக்கு இடையில கருத்து முரண்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகங்களில் ஒருவரை ஒருவர் பகிரங்கமாக விமர்சனம் செய்து கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த நிலைமையானது அரசாங்கத்திற்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கு இடையிலான மோதல்கள் முரண்பாடுகள் குறித்து ஜனாதிபதி உன்னிப்பாக அவதானித்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முரண்பாடுகளைக்களையும் நோக்கில் சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. ஏற்கனவே இரண்டு அமைச்சர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், மூன்றாவது அமைச்சரின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டதன் பின்னர் குழு நியமிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மும்மொழி அமுலாக்கம் ஜப்பான் நிதி உதவி

(கொழும்பு)

இலங்கையில் மும்மொழி கொள்கையை அமுலாக்கும் வேலைத்திட்டத்துக்காக ஜப்பான் அரசாங்கம் 100 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

இரண்டு கட்ட வேலைத்திட்டங்களுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆசிரியர்களுக்கு மும்மொழிகளிலும் பயிற்சியளிக்கும் பொருட்டு, 80.24 மில்லியன் ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இதற்கான கற்கை நூல்களை அச்சிடுதல் போன்ற பணிகளுக்காக 20 மில்லியன் ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதஸ்தலங்களை தகர்த்த இந்த அரசை மறக்க முடியுமா?

## தெற்கில் தேர்தல் சூடு கிளப்புகிறார் மனோ



ஆலயங்களையும், பள்ளிவாசல்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் தகர்த்து தாக்கியது இந்த ஆட்சியின் அரவணைப்பில் செயற்படும் இனவாத-மதவாத அமைப்புகள் என்பதை கொழும்பில் வாழும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்கிறார் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர மனோ கணேசன்.

முன்னணியின் வேட்பாளர் பிரதீப் சந்திரகாந்தின் ஏற்பாட்டில் கொம்பனி தெரு டோசன் வீதி தோட்டத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

கொள்ளுப்பிட்டியில் எழுந்தருளியிருந்த பூமாரியம்மன் அகதியாகி அருள்பாலிக்க இடமில்லாமல் இருக்கின்றாள் என்பதை இந்து மக்கள் மறந்து விடக்கூடாது. அத்துடன் தலைநகர் உட்பட இந்நாடு முழுக்க பல்வேறு இஸ்லாமிய பள்ளிவாசல்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும தாக்குதல், அச்சுறுத்தல், அவமானங்கள் ஆகியவற்றிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்பதை முஸ்லிம், கிறிஸ்தவ மக்களும் மறந்துவிடக்கூடாது.

கொம்பனி தெரு இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த மக்கள் கலந்து வாழும் பூமியாகும் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் இணைந்து வாழும் மண்ணாகும். இங்கு மலே மக்களும் வாழ்கிறார்கள். உண்மையில் இது முழு நாட்டுக்குமே முன்மாதிரி வட் டாரமாகும. இந்த முன்மாதிரி வட்டாரத்துக்கு இன்று ஆபத்து வந்தே விட்டது. ஏனென்றால் எல்லா மதத்தவரும், எல்லா இனத்தவரும் இணைந்து வாழ்வது இந்த அரசுக்கு பிடிக்காது.

தலைநகரில் வீடுகள் இடிக்கப்படுவது, குடியிருப்புகள் அகற்றப்படுவது கொம்பனி தெருவில் தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னமும் பல வீடுகள் இடித்து அகற்றப்படும் ஆபத்தை இந்த வட்டாரம்தான் எதிர்நோக்கியும் உள்ளது. எனவே கொழும்பின் வேறு எந்த ஒரு வட்டாரத்தையும் விட, இந்த கொம்பனி தெரு வட்டார மக்கள்தான் இந்த அரசுக்கு காட்டமான பதிலடியை எதிர்வரும் தேர்தலிலே தர வேண்டும். அந்த கடப்பாடு உங்களுக்கு இருக்கிறது என்றார்

# தேசியகலை இலக்கியப் போட்டிகள் இலக்கிய கர்த்தாக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற 2014ஆம் ஆண்டுக்கான தேசிய கலை இலக்கியப் போட்டிக்கான திறந்த பிரிவுக்குரிய ஆக்கங்களை பெற்றுக் கொள்ள வேலணை பிரதேச செயலக கலாசாரப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பிரதேசப் பிரிவில் உள்ளவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் சித்திரை மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கலாசாரப் பகுதிக்கு அனுப்பி வைக்குமாறும் திறந்த பிரிவில் 19வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடலாக்கம், சிறுவர்க விதை, சிறுகதை நாட்டார் இலக்கியம் இலக்கிய விபரணங்கள் என்பவற்றில் குறித்த போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் மேலதிக விபரங்களை வேலணை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் அறிந்து கொள்ளலாமென கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.(10)

# முகப்பு புத்தக விவகாரம் அரசைக் கவிழ்க்கும் சூழ்ச்சி

## மகிந்த சீற்றம்


(கொழும்பு)

முகப்புப்புத்தகத் தடை செய்யப்பட உள்ளதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கள் ஓர் சூழ்ச்சித் திட்டமாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்ட ஒரு சிலரே இந்த பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு போலிப் பிரசாரம் செய்தவர்க்ள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. மக்களை கிளர்ச்சியடைச் செய்து அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும்.

தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் அரசாங்கம், மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை ஒருபோதும் முடக்காது.

தொழில்நுட்ப பயன்பாட்டின் போது எவ்வாறான கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்பது பற்றி மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை தெளிவுபடுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.



# பரமர் சங்கமம்

'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பது வழமையானது தான். அதிலும் பொன் குஞ்செனத் திகளுவோரை எப்படித்தான் உச்சிபோந்தாலும் அதனது பெருமையைச் சொல்லி மாளாதெல்லே.

இந்திய தமிழகத் திரையுலகில் முதன் முதலில் நுழைந்த எம்மவர் ஒரு பெண்மணி. மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த அவர் ஆடைக்குறைப்பு செய்து நடித்ததால் ஆத்திரம் அடைந்த சகோதரர் சினிமாக் கொட்டகை திரைக்குத் தீமூட்டியதாகவும் பேசப்பட்டது.

சமீபத்தில் காலமான பாலுமகேந்திரா நம்நாட்டவர்! நம்மூரவர் என்று கூறிக்கொள்வதில் எவருமே பின்நிற்கமாட்டார். கிழக்கு மாகாண மட்டக்களப்பு அமிர்தகழி கிராமம் அவரை ஈன்ற மண்ணென் பதில் பெருமை அடைகிறது.

அதே போல் இன்னமும் சில இலக்கியக் காரர்களை அந்த மண் தந்தது எண்ணிக்கையில் மேலும் உரமேறுகிறது. காசி ஆனந்தன், செ.குணரத்தினம் ஆகிய கவிஞர்களும் அமர்தகழி மண்தந்த புதல்வர்களே.

வடக்கை எடுத்துக் கொண்டால் 'தங்கத் தாத்தா' கலையரசு அருமைநாயகம், இளமுருகனார், வி.என்.பாலசுப்பிரமணியம், அப்பாச்சி மகாலிங்கம், சோ. நடராசன், நவாலியூர் செல்லத்துரை, நவாலியூர் நடேசன், நவாலியூர்க்கவிராயர் போன்ற இலக்கிய திரைப்பட நாடக விற்பன்னர்களை தந்து நவாலியூர் மிகுந்த பெருமை அடைகிறது.

அதேவேளை பாலுமகேந்திராவும் நவாலியூரைச் சேர்ந்தவரென்பது உங்களில் பலருக்கு புதிய விடயமாகத் தெரியும். சமீபத்தில் அவர் காலமாக சில தினங்கள் முன்பாக நவாலி சென்.பிற்றர்ஸ் தேவாலய வளாகத்தில் செபமணி என்பவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன்.

பாலுமகேந்திரா நடித்தும் இருந்து அவரது இறுதிப் படமான 'தலைமுறைகள்' பற்றிப் பேச்சு வந்தது. அதனிடையே செபமணி சொன்னார் பாலுமகேந்திரா தன்னுடைய இரத்த உரித்து மச்சானென்று அவரும் தானும் ஒன்றாகப் பழகியதாகவும் கூறினார்.

அவரோடு ஓய்வு நேரங்களில் விளையாடித் திரிகையில் செய்த குறும்புத் தனங்கள் பற்றியும் விபரித்தார். கரட்டி ஓணான்களைப் பிடித்து அவற்றுக்கு போயிலைச் சாறு பருக்கி விட்டு வேடிக்கை பார்ப்பாராம்.

பின்நாளில் திறமை சாலிகளாக உருவாபவர்களின் இளமைக் காலச் செயற்பாடுகள் விந்தையாகவே அமையும். அந்த வகையில உலகத் திரைப்படச் சமூகம் உருவாக்கிய சிறந்த ஒளிப்பதிவாளரும் இயக்குனருமான பாலுமகேந்திரா எம்மண்ணின் மைந்தனெ னும் போது எங்களுக்கெல்லாம் பெருமையாகத் தான் இருக் கிறது.

காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு ஆகையில் கிழக்கின் அமர்தகழியும் வடக்கின் நவாலியும் பொன்குஞ்சைப் பெற்றதால் பெருமையும் இழந்ததால் வலியும் அடையும் இல்லையே பின்னை.....

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கல்வி முரசு தரும் தொடர் தமிழ் இலக்கணம்

பண்டிதர் : க.வே.பஞ்சாச்சரம்

## எழுத்து வகைகள்

**எழுத்துக்கள்:-**

பல்வேறுபட்ட ஒலி அணுக்களின் தனித்தனிச் சின்னங்களே எழுத்துக்களாகும். எழுத்துக்கள் வரிவடிவம் எனவும்படும். ஒலியன்கள் எனவும் படுகின்றன. எழுத்துக்கள் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும்.

**உயிர் எழுத்துக்கள் :**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள் எனப்படும்.

**மெய்யெழுக்துக்கள் :**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய் எழுத்துக்கள் எனப்படும்.

**உயிர்மெய் எழுத்துக்கள் :**

இந்தப் பதினெட்டு மெய்யெழுத்துக்களில் ஒவ்வொன்றோடும், அ, ஆ முதலிய பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் தனித்தனி சேர வரும் (18x12) இருநூற்றுப் பதினாறு எழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

உ+ ம் : ப் + ஊ = பூ, க் + ஓ = கோ, ங் + ஐ = ஙை, ய் + எ - யெ.

**ஆய்த எழுத்து:**

அகேனம் எனப்படும் ஃ எனும் ஓர் எழுத்து மட்டுமே ஆய்த எழுத்து எனப்படும்.

எனவே தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் மொத்தம் உயிர் 12 + மெய் 18+ ஆய்தம் 01 + உயிர்மெய் 216 = 247 ஆகும். உயிர்களும் மெய்களுமான முப்பதும் முதலெழுத்துக்கள். உயிர்மெய்களும் ஆய்தமுமான 217 சார்பெழுத்துக்கள்.

**குற்றெழுத்துக்கள் :**

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுள்ளும் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும், பதினெட்டு உயிர்மெய் வரிசைகளிலும் வரும் க, கி, கு, கெ, கொ முதலிய (18 X 5) தொண்ணூறும் ஆக மொத்தம் தொண்ணூற்றைந்து எழுத்துக்களும் குறுகிய ஒலி கொண்ட குற்றெழுத்துக்கள் எனப்படும்.

**நெட்டெழுத்துக்கள் :**

உயிர் எழுத்துக்களுள் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் பதினெட்டு உயிர்மெய் வரிசைகளிலும் வரும் கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ முதலிய (18X7) நூற்றிருபத்தாறும் ஆக மொத்தம் நூற்றுமுப்பத்து மூன்றும் நெடிய ஒலிகொண்ட நெட்டெழுத்துக்களாகும்.

**மாத்திரை :**

கண்கள் ஒரு தடவை இமைக்கும் நேரம் அல்லது கைவிரல்கள் ஒரு தடவை சுண்டக் கடக்கும் நேரம் ஒரு மாத்திரைப் பொழுது எனப்படும். இந்த ஒரு மாத்திரைப் பொழுதுகள் ஒரு குற்றெழுத்து ஒலிக்கப்பட்டு விடும். அதனால் ஒரு குறிலின் அதாவது ஒரு குற்றெழுத்தின் மாத்திரை ஒன்று ஆகும்.

இதுபோல நெடில் அதாவது நெட்டெழுத்து ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரைப் பொழுதுள் ஒலிக்கப்பட்டு விடுகிறது. எனவே ஒரு நெடிலின் மாத்திரை இரண்டு ஆகும்.

இவ்வாறே ஒரு மாத்திரைப் பொழுதுள் இரண்டு மெய்களோ ஒரு மெய் இரண்டு தடவையோ ஒலிக்கப்பட முடிவதால் ஒரு மெய்யின் மாத்திரை அரை எனக் கொள்ளப்படும்.

இவ்விதமே ஃ ஆகிய ஆய்த எழுத்தும் ஓரிமைப் பொழுதுள் இரு தடவை ஒலிக்கப்படுவதால் அரை மாத்திரை உடையதாயிற்று.

**வல்லின மெய்கள் :**

பதினெட்டு மெய்களுள் க், ச், ட், த், ப், ற் எனும் ஆறும் வல்லினமெய்கள் எனப்படும்.

மிகு மெய்களுள் ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறும் மெல்லின மெய்களாம். க் இற்கு ங், ச் இற்கு ஞ், ட் இற்கு ண், த் இற்கு ந், ப் இற்கு ம், ற் இற்கு ன், இன மெல்லெழுத்துக்களாம். இச் சோடி எழுத்துக்கள் ஒலிக்கப்படும் பொழுது வாயுறுப்புக்களின் தொழிற்பாடு ஒரே விதமாயமைதல் குறித்தே இனங்களாயமைந்தன. உள்நின்று எழுப்பப்படும் காற்றானது நெஞ்சைப் பொருந்தி வரும் பொழுது வல்லினமாகவும், மூக்கைப் பொருந்தி வரும் பொழுது மெல்லினமாகவும் ஒலிகள் வேறுபடுகின்றன. நீங்கள் ஒலித்துப் பார்த்தால் உண்மை தெளிவாகும்.

**இடையின மெய்கள்:**

மிகுதி ஆறாகிய ய், ர், ல், வ், ழ், ள் என்பன இடையின மெய்களாம். இந்த இடை ஒலியும், உயிர் ஒலியும், காற்றானது மிடற்றைப் பொருத்தி வருவதால் பிறப்பவையாகும். காற்றானது உச்சியைப் பொருந்திவரப் பிறப்பது ஃ ஒலியாகும்

**முற்றியல் உகர எழுக்துக்கள் :**

அது, விடு,பொறு போலத் தனிக்குற்றெழுத்துக்களின் பின்னால் வரும் வல்லின உகரங்களும், ஆறு மெல்லின உகரங்களும் (ஙு, ஞு, ணு, நு, மு, னு) ஆறு இடையின உகரங்களும் (யு, ரு, லு, வு, ழு, ளு) தத்தமக்குரிய ஒரு மாத்திரை எச்சந்தர்ப்பத்திலும் குறைவுபடாதொலிப்பவை. அதனால் அவை முற்றுகரங்களாம். சொல்லின் முதலிலும் இடையிலும் வரும் எல்லா உகரங்களும் முற்றுகரங்களே.

**குற்றியல் உகரங்கள் :**

தனிக்குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களுக்குப் பின்னால் சொல்லீறாக வரும் ஆறு வல்லுகரங்களும் (கு, சு, டு, து, பு, று) தத்தமக்குரிய ஒரு மாத்திரைக்குக் குறைந்து அரைநொடிப் பொழுதுகள் ஒலிக்கப்பட்டு விடுவதால் குறுகிய இயல்புள்ள உகரங்களாக - குற்றியல் உகரங்களாக மாறி விடுகின்றன. இதனால் குற்றியல் உகரம் ஒன்றின் மாத்திரை அரை ஆகும். உ+ம் நாற்று : இந்த 'று' வல்லொற்றான 'ற்' இற்குப் பின்னால் வருவதால் வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும் பஞ்சு : இந்த 'சு' மெல்லொற்றானது 'ஞ்' இற்குப் பின்னால் வருவதால் மென்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**கொய்து:** இந்த 'து' இடையெழுத்தாகிய 'ய்' இற்குப் பின்னால் வருவதால் இடைத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**வீடு:** இந்த 'டு' ஆனது வீ என்னும் தனி நெடிலைத் தொடர்ந்து வருவதால் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

மரபு : இந்த 'பு' ஆனது தனி நெடிலல்லாதவையும் ஒரு குறிலுக்கு மேற்பட்டவையுமான 2 உயிர் எழுத்துக்களைத் தொடர்ந்து வருவதால் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

எ஼ஃகு : இந்த 'கு' ஆனது ஃ எனும் ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வருவதால் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

இவ்வாறு நெடில் ஏழும் ஆய்த ஒன்றும் உயிர் அ-ஓ பதினொன்றும் வல்லின மெய், மெல்லின மெய் பன்னிரண்டும் வ் தவிர்ந்த இடைமெய் ஐந்தும் எல்லாமாக முப்பத்தாறு எழுத்துக்களைத் தொடரும் முப்பத்தாறு குற்றுகரங்கள் உள.

**குற்றியல் இகரங்கள் :**

மேற்கூறிய முப்பத்தாறு குற்றுகரங்களோடு 'யா' எனும் எழுத்து வந்து புணரும் பொழுது இக்குற்றியலுகரங்கள் குற்றியல் இகரங்களாக மாறும். உ+ம் : வீடு + யாது = வீடியாது. இவற்றுடன் கேண்மியா, சொன்மியா போன்றவற்றில் வரும் 'மி' யிலுள்ள இகரமும் குறுகிய இயல்புள்ள இகரமாகும். எனவே குற்றியலிகரங்கள் (36 +1) முப்பத்தேழாகும். இவற்றுக்குத் தனித்தனியே மாத்திரை அரை ஆகும்.

**ஐகாரக்குறுக்கம் :**

ஐகாரம் 'ஐ' என்று தன் பெயர் கூறுமளவிற் குறுகாது, முற்றியல் ஐகாரமாம். ஆனால் சொற்களில் முதலெழுத்தாகவோ நடு எழுத்தாகவோ, இறுதி எழுத்தாகவோ இது வரும்பொழுதோ, தனக்குரிய இரு மாத்திரைகளில் குறைந்து ஒரு மாத்திரைப் பொழுதுள் ஒலிக்கப்பட்டு விடுகிறது. இதனால் இது ஐகாரக் குறுக்கமாகிறது. ஐப்பசி, தைப்பொங்கல் - இவை போன்றவை மொழிமுதற் குற்றைகாரங்கள். வலைஞன், மடையன், மொழிநடு ஐகாரக் குறுக்கங்கள். தவணை, துவரை, திருக்கை - மொழியீற்றுக் குற்றை காரங்கள்.

**ஔகாரக் குறுக்கம் :**

ஔகாரம் தன் பெயர் கூறுமளவிற் குறுகாது முற்றௌகாரமாம். சொல் முதலிலும் (ஔவை, மௌலி) சொல் நடுவிலும் (அகௌரவம்) மட்டும் வருவனவாகிய ஔகாரம் எல்லாம் தமக்குரிய இரு மாத்திரைகளில் ஒன்று குறைந்து ஒரு மாத்திரை பெற்று ஔகாரக் குறுக்கமாகும்.

**ஆய்தக் குறுக்கம் :**

ல், ள் ஆகிய சொல்லிறுதி எழுத்துக்கள், வருஞ் சொல்லின் முதலெழுத்தான 'த்' உடன் சேரும்பொழுது ஃ ஆகத் திரிவடைவதுமுண்டு. (கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது) இவ்வாறு திரிந்துருவாகிப் பிற எழுத்துக்களின் நடுவில் வரும் ஃ தன் அரைமாத்திரையிலுங் குறுகிய 1/4 மாத்திரை ஒலி பெற்று ஆய்தக் குறுக்கமாகும்.

**மகரக் குறுக்கம் :**

பாடல்களில் சொல்லின் ஈற்றில் வரும் 'ம்' எழுத்தானது 'ன்' எனும் எழுத்தைத் தொடர்ந்து போன்ம் எனவும், 'ண்' எனும் எழுத்தைத் தொடர்ந்து மருண்ம் எனவும் வரும் சந்தர்ப்பங்களில் தன் அரை மாத்திரையிற் குறைந்தொலித்து மகரக் குறுக்கம் ஆகும். போலும் போல்ம் ஆகிப் போன்ம் அனது. மருளும் முருள்ம் ஆகி மருண்ம் ஆனது. இதன் மாத்திரை 1.ஃ4 ஆகும்.

**உயிரளபெடை :**

பாட்டில் ஓசை குறையுமிடத்து ஒரு சொல்லின் முதலிலோ நடுவிலோ ஈற்றிலோ உள்ள நெட்டெழுத்து. அல்லது குறில் நெடிலாக நீண்டு வந்த நெட்டெழுத்து உரிய இரண்டு மாத்திரைப் பொழுதுகள் அதிகமாக நீண்டொலித்தால் அது உயிரளபெடை எனப்படும். நீண்டொலிக்கும் நெடிலின் உயிரெழுத்தின் குறில் குறியீடாக வெளிப்பட்டு நிற்கும். உ +ம் : மேஎவிய, தனாஅது, படாஅ. இதனால் ஓர் உயிரளபெடையின் மாத்திரை (2 +1) மூன்றாகும்.

**ஒற்றளபெடை :**

ஒற்றெழுத்துக்களுள் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் என்பன தனிக்குற்றெழுத்துக்குப் பின்னாலும் இணைக் குற்றெழுத்துக்களுக்குப் பின்னாலும் சொல்லின் இடையிலும் இறுதியிலும் நின்று நீண்டொலித்து (அஞ்ஞ்சு, இலங்ங்கு, கண்ண் என இரட்டித்து நின்று ஒரு மாத்திரை பெற்றுப் பாடல்களின் இசைக்குறையை நிவர்த்தித்து நிறைவாக்கும்.

**ஆய்த அளபெடை:**

சொல்லின் இடையில் வரும் ஃ ஆகிய ஆய்த எழுத்தும் இரட்டித்து நீண்டொலித்து (1/2+ 1/2) ஒரு மாத்திரை பெற்றுப் பாட்டில் இசை நிறைத்து நிற்கும். இது ஆய்த அளபெடை எனப்படும். உ+ ம் எ஼ஃஃ கிலங்கிய

**சார்பெழுத்துக்கள்:**

1. உயிர்மெய்கள் 12 x 18216
2. முற்றாய்தம்

| | | | |
|---|---|---|---|
| வல்லாறன் மேலன | - எஃ கு, க ஃ சு<br>- ஃ டு அ ஃ து<br>- ஃ பு க ஃ து | 6 | 8 |
| திரிதலால் வருவது | - அக்கடியன்<br>அஃகடியன் | 1 | |
| விரிதலால் வருவது | ம கான் ஞ்ரீ<br>ம ஃ கான் | 1 | |

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான
# கல்வி முரசு தரும் அலகு ரீதியான பயிற்சி வினாக்கள்

## மெய்எண்கள்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. பின்வரும் விகிதமுறு எண்களை தசமமாக எழுதுவதுடன் , அவை முடிவுறு தசமமா அல்லது மீளும் தசமமா? எனவும் குறிப்பிடுக.
1. $\frac{4}{4}$ 2. $\frac{3}{4}$ 3. $\frac{2}{3}$ 4. $\frac{29}{90}$ 5. $\frac{5}{8}$
6. $\frac{11}{6}$ 7. $\frac{6}{7}$ 8. $\frac{17}{16}$ 9. $\frac{4}{9}$ 10. $\frac{5}{6}$

02. பின்வரும் மெய் எண்கள் விகிதமுறு எண்களா? விகிதமுறா எண்களா? எனக் குறிப்பிடுக.
1. $\sqrt{2}$ 2. $\sqrt{4}$ 3. $\sqrt{5}$ 4. $\sqrt{6}$ 5. $\sqrt{10}$

03. பின்வரும் தசம எண்களை விகிதமுறு எண்கள், விகிதமுறா எண்கள் என பாகுபடுத்துக.
1. 0.151515 - - - 2. 0.1515515551 - - - 3. 0.2171313131 - - -
4. 8.909009 5. 0.21359876 6. 23.25819724
7. 51.9276325 8. 2.12345678

04. பின்வருவன சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் குறிப்பிடுக.
1. எல்லா நிறை எண்களும் விகிதமுறு எண்களாகும் ( )
2. எல்லா மெய் எண்களும் விகிதமுறு எண்களாகும் ( )
3. $\sqrt{2}$ என்பது ஒரு மெய் எண்ணாகும். ( )
4. எல்லா மெய் எண்களும் முடிவுறு தசமங்கள் அல்லது மீளும் தசமங்கள் ஆகும் ( )
5. எல்லா முடிவுறு தசமங்களும் மெய் எண்களாகும் ( )
6. எல்லா விகிதமுறா எண்களும் மெய் எண்களாகும் ( )
7. $\sqrt{5}$ என்பது விகிதமுறு எண் ஆகும் ( )

05. பின்வரும் முழுமைச் சேடுகளை சேடுகளாக மாற்றுக.
1. $\sqrt{8}$ 2. $\sqrt{27}$ 3. $\sqrt{50}$ 4. $\sqrt{75}$ 5. $\sqrt{162}$
6. $\sqrt{125}$ 7. $\sqrt{200}$ 8. $\sqrt{245}$ 9. $\sqrt{300}$ 10. $\sqrt{800}$

06. பின்வரும் சேடுகளை முழுமைச் சேடுகளாக மாற்றுக.
1. $6\sqrt{8}$ 2. $2\sqrt{2}$ 3. $3\sqrt{2}$ 4. $3\sqrt{3}$ 5. $7\sqrt{2}$
6. $4\sqrt{2}$ 7. $10\sqrt{2}$ 8. $5\sqrt{3}$ 9. $7\sqrt{5}$ 10. $10\sqrt{5}$
11. $6\sqrt{2}$ 12. $3\sqrt{7}$

07. சுருக்குக.
1. $2\sqrt{2}+3\sqrt{2}$ 2. $2\sqrt{5}+2\sqrt{5}$ 3. $7\sqrt{2}+3\sqrt{2}$ 4. $5\sqrt{2}+4\sqrt{2}$
5. $3\sqrt{7}+2\sqrt{7}$ 6. $5\sqrt{2}+\sqrt{8}$ 7. $10\sqrt{5}+\sqrt{20}$ 8. $7\sqrt{3}+\sqrt{27}$
9. $\sqrt{8}+\sqrt{18}$ 10. $5\sqrt{2}+3\sqrt{2}$

08. சுருக்குக.
1. $7\sqrt{5}-4\sqrt{5}$ 4. $8\sqrt{2}-4\sqrt{2}$ 7. $9\sqrt{7}-6\sqrt{7}$ 9. $10\sqrt{2}-5\sqrt{2}$
2. $7\sqrt{3}-2\sqrt{3}$ 5. $\sqrt{98}-\sqrt{8}$ 8. $\sqrt{300}-\sqrt{75}$ 10. $10\sqrt{3}-\sqrt{147}$
3. $7\sqrt{5}-\sqrt{20}$ 6. $\sqrt{45}-\sqrt{20}$

09. சுருக்குக.
1. $2\sqrt{5}+6\sqrt{5}-5\sqrt{5}$ 2. $6\sqrt{2}+4\sqrt{3}-\sqrt{2}+3\sqrt{3}$ 3. $\sqrt{20}-\sqrt{45}+\sqrt{80}$

10. சுருக்குக.
1. $\sqrt{5}\times\sqrt{5}$ 2. $2\sqrt{3}\times5\sqrt{3}$ 3. $7\sqrt{2}\times3\sqrt{2}$ 4. $5\sqrt{5}\times2\sqrt{5}$
5. $10\sqrt{2}\times3\sqrt{2}$ 6. $7\sqrt{3}\times2\sqrt{3}$ 7. $10\sqrt{7}\times2\sqrt{7}$ 8. $\sqrt{3}\times\sqrt{2}$
9. $\sqrt{8}\times\sqrt{18}$ 10. $5\sqrt{2}\times3\sqrt{3}$ 11. $7\sqrt{5}\times2\sqrt{2}$ 12. $5\sqrt{3}\times3\sqrt{5}$
13. $7\sqrt{2}\times3\sqrt{7}$ 14 $5\sqrt{5}\times\sqrt{2}$ 15. $\sqrt{5}\times\sqrt{8}$ 16. $\sqrt{8}\times\sqrt{4}$
17. $3\sqrt{5}\times2\sqrt{5}$ 18. $2\sqrt{3}\times3\sqrt{33}$ 19. $2\sqrt{3}\times7\sqrt{2}$ 20. $2\sqrt{10}\times\sqrt{15}$

11. சுருக்குக.
1. $\sqrt{6}\div\sqrt{2}$ 2. $\sqrt{8}\div\sqrt{2}$ 3. $\sqrt{10}\div\sqrt{2}$ 4. $\sqrt{15}\div\sqrt{3}$
5. $\sqrt{\frac{7}{8}\times\frac{8}{7}}$ 6. $\sqrt{10}\div\sqrt{5}$ 7. $\sqrt{75}\div\sqrt{3}$ 8. $\frac{3\sqrt{60}}{4\sqrt{15}}$
9 $\frac{3\sqrt{60}}{4\sqrt{5}}$ 10. $\frac{\sqrt{99}}{8\sqrt{11}}$

12. சுருக்குக.
1. $\frac{\sqrt{80}-3\sqrt{5}}{\sqrt{5}}$ 2. $\frac{\sqrt{6}\times\sqrt{9}}{\sqrt{2}}$ 3. $\sqrt{\frac{18}{2}}$
4. $\sqrt{6}\times\sqrt{8}$ 5. $\frac{\sqrt{125}}{\sqrt{5}}$

13. பகுதி எண்ணிலுள்ள விகிதமுறா எண்களை விகிதமுறும் எண்களாக மாற்றுக.
1. $\frac{3\sqrt{5}}{\sqrt{3}}$ 2. $\frac{1}{\sqrt{2}}$ 3. $\frac{3}{\sqrt{3}}$ 4. $\frac{5}{\sqrt{5}}$ 5. $\frac{7}{\sqrt{7}}$
12. $\frac{2}{\sqrt{2}}$ 7. $\frac{2\sqrt{2}}{\sqrt{3}}$ 8. $\frac{3\sqrt{2}}{\sqrt{5}}$ 9. $\frac{5\sqrt{5}}{\sqrt{3}}$ 10. $\frac{7\sqrt{7}}{\sqrt{3}}$

14. $\sqrt{2} = 1.414$, $\sqrt{3} = 1.732$, $\sqrt{5} = 2.236$, $\sqrt{7} = 2.645$ எனின் பின்வருவனவற்றின் பெறுமானங்களைக் காண்க.
1. $3+3\sqrt{2}$ 2. $7+\sqrt{3}$ 3. $\sqrt{18}+2\sqrt{3}$ 4. $4\sqrt{5}-\sqrt{12}$
5 $\frac{15-\sqrt{125}}{5}$ 6. $\sqrt{63}$ 7. $\sqrt{175}$ 8. $\sqrt{28}$

15. எளிய வடிவில் தருக.
1. $\sqrt{44}$ 2. $\sqrt{54}$ 3. $\sqrt{288}$ 4. $\sqrt{98}$ 5. $\sqrt{384}$
6 $\sqrt{147}$ 7. $\sqrt{270}$ 8. $\sqrt{720}$

16. சுருக்குக.
1. $3\sqrt{45}-\sqrt{20}+7\sqrt{5}$
2. $\sqrt{44}-5\sqrt{176}+2\sqrt{99}$
3. $4\sqrt{63}-5\sqrt{7}-8\sqrt{28}$
4. $4\sqrt{128}-4\sqrt{50}-5\sqrt{162}$
5. $\sqrt{216}-\sqrt{294}-48\frac{\sqrt{1}}{\sqrt{6}}$
6. $\frac{7}{\sqrt{3}}+\sqrt{3}$
7. $\frac{8}{\sqrt{2}}+3\sqrt{2}$

17. முழுமைச் சேடுகளாகக் காட்டுக.
1. $11\sqrt{2}$ 2. $14\sqrt{5}$ 3. $\frac{4}{11}\sqrt{\frac{27}{8}}$

18. சுருக்குக.
1. $2\sqrt{14}\times\sqrt{21}$
2. $2\sqrt{15}\times3\sqrt{5}$
3. $21\sqrt{384}\div8\sqrt{98}$
4. $5\sqrt{27}\div3\sqrt{24}$
5. $6\sqrt{14}\div2\sqrt{21}$
6. $\frac{3\sqrt{11}}{2\sqrt{98}}\div\frac{5}{2\sqrt{22}}$

19. $\sqrt{5} = 2.2360$, $\sqrt{6} = 2.4494$, $\sqrt{7} = 2.6457$ எனின் பின்வருவனவற்றின் பெறுமானங்களை மூன்று தசமதானங்களுக்கு தருக.
1. $\frac{48}{\sqrt{6}}$ 2. $\frac{10}{\sqrt{7}}$ 3. $\frac{1}{\sqrt{500}}$ 4. $\frac{4}{\sqrt{28}}$ 5. $\frac{1}{\sqrt{7}}+\frac{1}{\sqrt{6}}$

20. பின்வரும் பின்னங்களை தசமங்களாக எழுதி அவற்றில் எவை முடிவுறு தசமங்கள், எவை மீளும் தசமங்கள் எனக் குறிப்பிடுக.
1. $\frac{2}{5}$ 2. $\frac{13}{4}$ 3. $\frac{1}{3}$ 4. $\frac{2}{7}$ 5. $\frac{1}{4}$ 6. $\frac{7}{5}$
7. 7 8. 5

21. பின்வருவனவற்றை முடிவுறு தசமங்கள், மீளும் தசமங்கள், முடிவில் தசமங்கள் என வகைப்படுத்துக.
1. 0.25 2. 0.333 - - - 3. 1.73254 - - - 4. 0.7 5. 0.4285714285 - - -
6. 0.1234 - - -

22. பின்வரும் எண்களை வகைக் குறிக்கும் விகிதமுறு எண்களைக் காண்க.
1. 0.7
2. 0.4

23. பின்வருவனவற்றின் பெறுமானங்களை மூன்று தசமதானத்திற்கு மட்டந்தட்டுக.
1. $\sqrt{2}$ 2. $\sqrt{3}$ 3. $\sqrt{5}$ 4. $\sqrt{7}$

24. பின்வரும் சேடுகளை எளிய வடிவில் தருக்.
1. $\sqrt{18}$ 2. $\sqrt{384}$ 3. $2\sqrt{175}$ 4. $5\sqrt{726}$

25. பின்வருவனவற்றை முழுமைச் சேடுகளாக தருக.
1. $2\sqrt{6}$ 2. $5\sqrt{6}$ 3. $12\sqrt{2}$ 4. $7\sqrt{3}$ 5. $11\sqrt{5}$ 6. $\frac{7\sqrt{3}}{\sqrt{7}}$

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு பலம் சேர்த்தல்

## மூன்று ஆண்டுகளில் வியக்கத்தக்க அறுவடை

(வலி.மேற்கு)

யாழ். மாவட்டத்தில் புற நெகும- திட்டத்தின் கீழ் 17 உள்ளூராட்சி சபைகளுக்கு உட்கட்டுமான அபிவிருத்திக்காக ஆயிரத்து 757 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் 2011, 2012, 2013 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு நெல்சிப் புறநெகும திட்டத்தின் ஊடாக யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகள், மக்களின் முன்னுரிமைத் தேவைகளை நிறைவேற்றியுள்ளதுடன் 2014 இலும் இத்திட்டம் முன்னகர்த்தப்பட பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

இதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் 525 மில்லியன் ரூபாவும், 2012 ஆம் ஆண்டில் 790 மில்லியன் ரூபாவும், 2013 இல் 440 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 1757 மில்லியன் ரூபா மூன்று ஆண்டுகளுக்காக செலவு செய்யப்பட்டு உள்ளூராட்சியில் மக்களின் தேவைகள் முன்னகர்த்தப்பட்டு உள்ளூராட்சி மன்றங்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அபிவிருத்திக்கான நிதி விபரம் வருமாறு

பருத்தித்துறை பிரதேச சபை - 127 மில்லியன் ரூபா, சாவகச்சேரி பிரதேச சபை - 121 மில்லியன் ரூபா.

வலி.கிழக்கு பிரதேச சபை 110 மில்லியன் ரூபா.

வலி. தென்மேற்கு பிரதேச சபை 108 மில்லியன் ரூபா.

வேலணை பிரதேச சபை 103 மில்லியன் ரூபா.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை - 101 மில்லியன் ரூபா.

வலி.தெற்கு பிரதேச சபை - 101 மில்லியன் ரூபா. வலி.மேற்கு பிரதேசசபை 100 மில்லியன் ரூபா.

நல்லூர் பிரதேச சபை - 96 மில்லியன் ரூபா. ஊர்காவற்றுறை பிரதேச சபை - 95 மில்லியன் ரூபா. சாவகச்சேரி நகர சபை - 94 மில்லியன் ரூபா.

பருத்தித்துறை நகர சபை - 98 மில்லியன் ரூபா. நெடுந்தீவு பிரதேச சபை - 99 மில்லியன் ரூபா. வல்வெட்டித்துறை நகர சபை - 98 மில்லியன் ரூபா.

காரைநகர் பிரதேச சபை - 93 மில்லியன் ரூபாவும், யாழ். மாநகர சபைக்கு 103 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

# மனிதநேயச் செயற்பாடு

கொடிகாமம் பருத்தித்துறை முள்ளி பிரதான வீதியில் கைப்பை ஒன்று கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீதியூடாக சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் கைப்பை வீதியில் கிடந்ததை அவதானித்ததுடன் அதனை எடுத்து தவறவிட்டவர்கள் தேடி வரும்வரை அரை மணிநேரம் காத்திருந்து உரியவரிடம் உறுதிப்படுத்திய பின் ஒப்படைத்துள்ளார்.

இந்நபரின் மனிதநேய செயற்பாட்டை அப்பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை இந்நபர் கொடிகாமத்திலும் வீதியில் கிடந்த கைத்தொலைபேசி ஒன்றை எடுத்து உரியவரிடம் ஒப்படைத்து பாராட்டைப் பெற்றுள்ளார். (150)

# சமாதானம் வேண்டி கதிர்காமம் யாத்திரை

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய பஜனை குழுவினர் 55 பேர் சிவனொளிபாதமலை மற்றும் கதிர்காமம் சென்று திரும்பியுள்ளனர். ஸ்ரீகதிர்காம முருகன் ஆலய பிரமகுரு சிவத்திரு நா.பத்மநாதன் தலைமையிலான குழு 5 நாள் ஆலயயாத்திரையை முடித்து திரும்பியுள்ளனர்.

இலங்கை திருநாட்டில் சாந்தி, சமாதானம், ஐக்கியம், ஒருமைபாடு என்பன நிலவவேண்டும் என்ற நோக்கில் நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்தினர் சிவனொளிபாத மலை, செல்லக்கதிர்காமம், கதிர்காமம், நுவரெலியா, சீதாலயம், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் உட்பட 7 ஆலயங்களைத் தரிசித்து வந்ததுடன், இந்நாட்டில் நிம்மதி சமாதானம், அமைதி வேண்டி பிரார்த்தனை, பஜனை என்பன மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி பஜனைக் குழுவிற்கும், யாத்திரிகர்களுக்கும் விசேட வரவேற்பு அளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# வலி. மேற்கில் அனுமதியற்ற கட்டடங்கள் பொறுப்பை தட்டிக்கழிக்கிறது பிரதேச சபை

(வலி.மேற்கு)

வகைதொகையின்றி வலி. மேற்கில் அனுமதியற்ற கட்டடங்கள், மதில்கள் என்பன புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுமதியற்ற கட்டடங்கள் அமைக்கப்படுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டபோதும், நடவடிக்கைகள் எடுக்கப்படாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுமதியற்ற கட்டடங்கள், வரி வசூலிப்பு தொடர்பில் வருமான பரிசோதகர்கள், பொறுப்பதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

ஆனால் பொறுப்பதிகாரிகள், வருமான மேற்பார்வையாளர் இதற்கான துரித நடவடிக்கைகள் எவையும் எடுப்பதில்லை.

இதனால் பொதுவழி மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் கட்டடங்கள் தொடர்பில் எங்கு முறையிடுவது என்று தெரியாது மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் உள்ளூராட்சியின் கவனத்திற்கு கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மாதாந்தக் கூட்டங்களில் இவ்விடயம் தொடர்பில் ஆராயுமாறு தலைவர் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் இவ்விடயம் தொடர்பில் கடந்த 4 மாதங்களாக ஆராயப்படவில்லை எனவும் உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வருமான மேற்பார்வையாளராக இருந்து வருமான பரிசோதகர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு பயிற்சியை வழங்கினால் மட்டுமே அவர்கள் உள்ளூராட்சியின் கடமைகளை புரியக்கூடியதாகவுள்ளது. இல்லாவிடில் அவர்கள் அலுவலகத்திலேயே முடங்கியிருப்பதுடன் இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்கள், மதில்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காததால் போதிய வருமானமும் சபைக்கு கிடைக்காது போகின்ற பாதக நிலையே தொடர்ந்து ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

எல்.பீ. பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

வவுனியா, கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், நெல்லியடி உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் காணப்படும் நிறுவனத்தின் கிளைகளில் ஏல விற்பனை இடம்பெறும்.

வடமாகாணத்தில் ஏப்ரல் 5, 21, 28 ஆம் திகதிகளில் ஏலவிற்பனை நடைபெறும்.(105)

## யோகாசன வகுப்பு

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் யோகாசனம், பண்ணிசை, வயலின், மிருதங்கம் ஆகிய வகுப்புக்கள் இலவசமாக நடைபெற்று வருகின்றன.

இந்து சமய கலாசார திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் இவ்வகுப்புக்களில் யோகாசன வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆண்களுக்கும் 7.30 முதல் 8.30 மணிவரை பெண்களுக்கும் நடைபெற்றுவருகின்றது.

# வடக்கில் இருந்து மாத்தறைக்கு விசேட ரயில் சேவை விரைவில்

வடக்கில் இருந்து மாத்தறைக்கும் விசேட ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது வார இறுதி நாட்களில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பளையிலிருந்து கொழும்புக்கு தினமும் குளிரூட்டப்பட்ட விசேட சொகுசு ரயில் சேவை நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் முதல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தினமும் காலை 6.50 மணிக்கு பளையிலிருந்து புறப்படும் இச்சொகுசு ரயில் 6 மணித்தியாலங்களில் கொழும்பைச் சென்றடைகிறது.

சனிக்கிழமைகளில் மாத்தறையில் இருந்து பளைவரை மற்றுமொரு ரயில் சேவை இடம்பெறவுள்ளது. இதற்கான பயணச் சீட்டுக்களை சகல புகையிரத நிலையங்களிலும் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்படுகிறது. (10)

# தங்கம் கடத்திய இருவர் கொழும்பில் கைது

சட்டவிரோதமான முறையில் 60 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியான தங்கத்தைக் கடத்திச்செல்ல முயன்ற பெண்கள் இருவர் உட்பட மூவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் இரவு இந்தியா நோக்கி பயணிக்க தயாரானபோது கைது செய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஒரு கிலோ கிராமிற்கும் அதிகமான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. இவற்றில் செய்து முடிக்கப்பட்ட காப்பு, மோதிரம் மற்றும் தங்கச் சங்கிலிகள் இருந்ததாக விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கொடாஞ்சேனையைச் சேர்ந்த தாய், மகள் மற்றும் மகன் என லெஸ்லி காமினி குறிப்பிட்டார். இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்க திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

# ஹட்டனில் மண்சரிவு வீடுகள் இடிந்து அழிவு

(கொழும்பு)

ஹட்டன் சமனலகம பகுதியில் ஏற்பட்ட மண் சரிவினால் 2 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 7 மணியளவில் ஏற்பட்ட இந்தச் சம்பவத்தினால் ஒரு வீடு இருந்த இடம் தெரியாதளவிற்கு மண் சரிந்து முடியுள்ளதுடன், மற்றைய வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் முழுமையாகச் சேதமடைந்த வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்ததாக தெரிய வந்துள்ளது.

அத்துடன் மற்றைய வீட்டில் குடியிருப்பாளர்கள் இருந்துள்ளனர் எனினும் எவருக்கும் காயங்களோ, உயிராபத்துக்களோ ஏற்படவில்லை.


கடந்த காலங்களில் மலையகத்தில் காணப்பட்ட வறட்சியான காலநிலைமாறி தற்போது பிற்பகல் வேளையில், அதிகளவான மழை காணப்படும் நிலையில் நீர் பாய்தோடியதால் மண் இறுக்கம் குறைவடைந்து சிமெந்தால் பாதுகாப்பாக கட்டப்பட்ட வேலியையும் உடைத்துக் கொண்டு இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

முறையான பாதுகாப்பு மற்றும் வடிகான் அமைப்புகள் ஏற்படுத்தப்படாத நிலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தொடர்ந்து இந்தக் கட்டுமானங்களில் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படாது விட்டால் இவ்வாறான சம்பவங்கள் தமது பகுதிகளில் அதிகளவில் இடம்பெற்று உயிராபத்துக்கள் ஏற்படும் என்பதால் ஹட்டன் - டிக்கோயா நகர பிதா இந்த கட்டுமானங்கள் மற்றும் வடிகான் அமைப்புகள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என அப்பிரதேச குடியிருப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அமைதி ஊர்வலம் நேற்றுக்காலை நல்லூரிலிருந்து ஆரம்பமாகி யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தை சென்றடைந்தது. இதன்போது அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் பெண்கள் பதாகைகளுடன் ஊர்வலமாக செல்வதைக் காணலாம். (படங்கள் : ஆர். இராஜ்குமார்)

# அணு உலை தயாரித்து பிரிட்டன் சிறுவன் சாதனை



பிரிட்டனை சேர்ந்த பள்ளி சிறுவன் ஒருவன் அணு உலையை தயாரித்து சாதனை படைத்துள்ளான். இங்கிலாந்தின் லங்காஷயர் என்ற பகுதியில் உள்ள பள்ளியில் ஜேமி எட்வர்ட்ஸ்(வயது13) என்ற மாணவன் படித்துவருகிறான்.

இவன் கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்பால், பள்ளியின் பரிசோதனைக்கூடத்தில் அணு உலை செய்வதற்கான முயற்சியில் இறங்கினான். இதற்காக மிக கடினமாக உழைத்த ஜேமி தற்போது அணு உலை மாதிரியைத் தயாரித்து, சாதனை படைத்துள்ளான்.

இதுகுறித்து ஜேமி கூறுகையில், நான் உருவாக்கியுள்ள அணு உலை மாதிரியை வைத்து, எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிக்க முடியும் என்றும் கதிர்வீச்சு அபாயத்தை தடுப்பது குறித்து, பயிற்சி பெற்று வருகிறேன் எனவும் தெரிவித்துள்ளான்.

# வலிமைமிக்க அமெரிக்கா இது ஒபாமாவுக்கு தெரியாதா?

## கிண்டல் செய்கிறார் பாபி ஜிண்டால்



(வோஷிங்டன்)

அமெரிக்க வரலாற்றிலே மிகவும் மோசமான ஜனாதிபதியாக ஒபாமா அமெரிக்காவின் இந்திய வம்சாவளியை சேர்ந்த பாபி ஜிண்டால் கூறியுள்ளார். ஜிண்டால் லூசியானா கவர்னராக இருந்து வருகிறார். அவர் குடியரசு கட்சியை சேர்ந்தவர்.2016 இல் நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதியாக தேர்தலில் போட்டி யிடுபவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.நான் இதுவரை அமெரிக்க ஜனாதிபதிகளில் ஜிம்மி கார்டர்தான் மிகவும் மோசமானவராக இருந்தார் என்பதை அறிந்திருந்தேன். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஒபாமாதான் மிகவும் மோசமானவராக உள்ளார் என வோஷிங்டனில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பாபி ஜிண்டால் இவ்வாறு கூறினார்.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா தலையிட்டு இராணுவ பலத்தை காட்ட படைகளை குவித்து படையெடுத்து வருகிறார். ஆனால் ஒபாமாவோ, இராணுவ பலத்தை காட்டாமல் படை குறைப்பு குறித்து பேசி வருகிறார் என்றார். வலிமை உள்ள அமெரிக்கா தான் அமைதியான உலகத்துக்கு வேண்டும் என்பது கூட தெரியாத ஜனாதிபதியாக இருக்கிறார் ஒபாமா என்றார்.வெளியுறவு கொள்கையில் அவரிடம் உறுதியான முடிவு இல்லை.அதேபோல் பொருளாதார மற்றும் உள்நாட்டு கொள்கையிலும் அவரிடம் திறமையான நடவடிக்கை இல்லை என்றுதான் நான் சொல்வேன் என்கிறார்.

# விமான விபத்துக்கு காரணம் என்ன?

# விடைகாணத்துடிக்கிறது மலேசியா

## வியட்நாம் கடலில் தேடுதல் வேட்டை



விபத்திற்குள்ளான மலேசிய ஏயாலைன்ஸ் போயிங் 777 விமானத்தில் பயணம் செய்த பயணிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அதாவது இதில் 12 விமான ஊழியர்கள் மற்றும் 227 பயணிகள் பயணம் செய்தனர். இதில் 153 பயணிகள் சீனாவையும், 38 பேர் மலேசியாவையும், 12 பேர் இந்தோனேசியாவையும், 6 பேர் அவுஸ்ரேலியாவையும், 5 பேர் இந்தியாவையும், 4 பேர் அமெரிக்காவையும், மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 3 பேரும் நியூசிலாந்து, உக்ரேன், கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா 2 பேரும் விமானத்தில் பயணம் செய்துள்ளனர். மீதமுள்ள பயணிகள் வேறு சில நாடுகளைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய ஏயாலைன்ஸ், ஆசியாவில் உள்ள மிகப் பெரிய தேசிய விமான நிறுவனங்களில் ஒன்றாகும். இதன் விமானங்களில், உலகம் முழுவதும் 80 இடங்களுக்கு தினமும் சுமார் 37,000 பயணிகள் பயணம் செய்வதாகவும் மலேசியத் தலைநகர் கோலாலம்பூர் நகரில் இருந்து சீனாவின் பீஜிங் நகருக்கான விமான வழித்தடம் மிகவும் பிரபலமானது. மலேசியா - சீனா இடையே வர்த்தகம் அதிகரித்து இருப்பதால், இந்த இரு நகரங்களுக்கு இடையே அதிக அளவில் விமானங்கள் இயக்கப்படுகின்றன என விமான நிறுவனத்தின் தலைவர் யாஹ்யா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது மலேசிய ஏயாலைன்ஸ் நிறுவனத்தின் விமானங்களை மிகவும் திறமையும் அனுபவமும் வாய்ந்த விமானிகளே ஓட்டுகின்றனர். விபத்திற்குள்ளான போயிங் 777 விமானத்தையும் ஓட்டிச் சென்ற விமானிகள் மிகவும் திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்கள் என்றும் 53 வயதான விமானி ஜஹாரியா அகமது ஷா கடந்த 1981ஆம் ஆண்டில் விமானியாக பணியில் சேர்ந்தார். அவர், 18 ஆயிரம் மணி நேரம் பயணிகள் விமானத்தை ஓட்டிய அனுபவம் உள்ளவர். அதேபோல், மற்றொரு விமானியான 27 வயது பரீக் ஹமீது என்பவர் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் விமானியாக பணியாற்றுகிறார். அவரும் சுமார் 2,800 மணி நேரம் விமானத்தை திறமையாக ஓட்டிய அனுபவம் உடையவர் என்றார்.

# குற்றவாளிகள் விடுதலை குறித்து தமிழக அரசின் முடிவு சரியானது


## சட்டத்தரணி ராம்ஜெத்மலானி



ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை பெற்ற முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. இவ்வழக்கில் அவர்களின் சார்பில்-பிரபல சட்டத்தரணி ராம் ஜெத்மலானி உச்சநீதிமன்றில் வாதாடினார். அவரது சிறந்த வாத திறமையால் 3 பேரும் தூக்குத் தண்டனையில் இருந்து தப்பினர். இதனால், அவருக்கு ம.தி.மு.க. வழக்கறிஞர் பேரவை சார்பாக சென்னையில் நேற்று முன் தினம் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் ராம் ஜெத்மலானி பேசுகையில், 'ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை பெற்ற கைதிகளுள் ஒருவரான நளினிக்கு மாநிலத்தின் கவர்னர் மன்னிப்பு அளித்ததன் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இப்போது ஆயுள் தண்டனை பெற்ற 7 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது. முதல்வர் ஜெயலலிதா சரியான தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். இந்த முடிவில் அவர் உறுதியாக இருந்து அவர்களை விடுதலை செய்வார் என்று நம்புகிறேன். மூன்று குற்றவாளிகளின் தண்டனையை குறைக்க நீண்ட காலமாகிவிட்டது அவர்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நிமிடமும் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தனர் என்று அவர் குறிப்பிட்டார்.

# காங்கிரஸ் தனித்துப்போட்டி டில்லியில் ஆலோசனை



திமுக கூட்டணிக்கு இனி வாய்ப்பில்லை என்பதால் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தனித்துப் போட்டியிட திட்டமிட்டுள்ளது.

கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும், காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட திமுக, இம்முறை 2 ஜி வழக்கு சிக்கலால் காங்கிரஸுடனான உறவைத் துண்டித்துக் கொண்டது.

இந்நிலையில், வரும் தேர்தலில் தமிழகத்தில் வேறு யாரும் கூட்டணி சேர முன்வராத நிலையில், காங்கிரஸ் தனித்து விடப்பட்டுள்ளது. எப்படியும் திமுக கூட்டணி அமைந்துவிடும் என காங்கிரஸ் தலைவர்கள் நம்பிக்கையுடன் இருந்தனர்.

ஆனால், ஸ்டாலினும் கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகளும் காங்கிரஸ் வருகையை விரும்பவில்லை. இருப்பினும், தேசியக் கட்சியின் தயவு டில்லி அரசியலுக்கு வேண்டுமென விரும்பியதால் மீண்டும் காங்கிரஸ் கூட்டணி குறித்த பேச்சுக்களை தொடங்கியது தி.மு.க.

இந்நிலையில், அதிமுக கூட்டணியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியேறியது, திமுக கூட்டணியிலும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸுக்குப் பதில் கம்யூனிஸ்ட்களை சேர்க்கலாம் என திமுக தலைமை பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த காங்கிரஸ் தலைமை, ஞானதேசிகனை திடீரென டில்லிக்கு அழைத்து ஆலோசனை நடத்தி வருகிறது. கூட்டணிப் பேச்சை காங்கிரஸ் தொடங்கினாலும் தி.மு.க தரப்பில் இடதுசாரிகளை சேர்ப்பதிலேயே அதிக அக்கறை காட்டுவதால் காங்கிரஸ் நிர்வாகிகள் குழப்பமடைந்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக டில்லியிலிருக்கும், ஞானதேசிகனிடம், காங்கிரஸ் மேலிட நிர்வாகிகள், தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர். தமிழகத்தில் காங்கிரஸ் வாக்கு வங்கி குறித்த பட்டியலை எடுத்து, அதன் அடிப்படையில் உள்ளூரில் பலம் வாய்ந்த காங்கிரஸாரை வேட்பாளர்களாக்கி, தனித்தே போட்டியிடலாம் என திட்டமிட்டு வருகின்றனர்.

கூட்டணியில் தி.மு.க சேர்க்காத பட்சத்தில், அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்தமாகக் கருதி, தனித்துப் போட்டியிட காங்கிரஸ் நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

# சட்டசபைத் தேர்தலில் எடியூரப்பா போட்டி



(புதுடில்லி)

பா.ஜ., சார்பில், சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின், இரண்டாவது பட்டியலை, அக்கட்சி நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில், கர்நாடகா முன்னாள் முதல்வரும், தனி கட்சிதொடங்கி, பின், மீண்டும் பா.ஜ.,வில் இணைந்தவருமான, எடியூரப்பாவுக்கு, வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சட்டசபைத் தேர்தல் ஒன்பது கட்டங்களாக நடக்கிறது. முதல் கட்ட தேர்தல், அடுத்த மாதம், 7இல், நடக்கிறது. இதையடுத்து, அரசியல் கட்சிகள், தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளன. ஒவ்வொரு கட்சியும், தங்கள் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவித்து வருகின்றன. பா.ஜ சார்பில், முதல் வேட்பாளர் பட்டியல், பெப்ரவரி, 27இல் வெளியிடப்பட்டது. இதில், 54 பெயர்கள் இடம் பெற்றிருந்தன. இரண்டாவது பட்டியலை வெளியிடுவது குறித்து, பா.ஜ , தேசிய தலைவர் ராஜ்நாத் சிங், மூத்த தலைவர் அத்வானி, பா.ஜ, பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி ஆகியோர், நேற்றுமுன்தி னம் டில்லியில் ஆலோசனை நடத்தினர்.

இதையடுத்து, நேற்று முன் தினம் மாலை, இரண்டாவது பட்டியல் வெளியிடப்பட்டது. அதில், 52பெயர்கள் இடம் பெற்றிருந்தன. கர்நாடகா, ஒடிசா, திரிபுரா, கேரளா, அசாம் மற்றும் மேற்குவங்கம் ஆகிய ஆறு மாநிலங்களில், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், இதில் இடம் பெற்றிருந்தன.

இந்த பட்டியலில், அனைவரும், ஆச்சரியப்படும் வகையில், கர்நாடகா முன்னாள் முதல்வர் எடியூரப்பாவின் பெயரும், இடம் பெற்றிருந்தது. இவர், ஷிமோகா தொகுதியில் போட்டியிடுவார் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணியற்ற வட்டக்கச்சி மக்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும்

## சந்திரகுமார் எம்.பி. உறுதியளிப்பு



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி பிரதேசத்தில் காணியற்ற மக்களின் காணி பிணக்குகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட்டு அம்மக்களுக்கான வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று வடக்கச்சி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு காணியற்ற மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததோடு அந்த மக்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள காணியினையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதன் போதே அங்கு வருகைதந்துள்ள மக்களிடம் மேற்படி தனது கருத்தை தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

வட்டக்கச்சி மற்றும் பளை பிரதேசங்களில் காணியற்ற மக்களின் காணி பிணக்குகளை தீர்க்கும் வகையில் வனவள திணைக்களத்தின் அனுமதியினை கோரியிருந்தோம் ஆனால் பளை பிரதேசத்தில் நாம் கோரிய இடத்திற்கான அனுமதி கிடைத்துவிட்டது வடக்கச்சி பிரதேசத்தில் மாத்திரம் வனவள திணைக்களம் இங்கு அடர்ந்த காடுகள் எனவும் அந்த காடுகளை அழிக்க முடியாது எனவும் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்கள் எனவே இந்த பிரதேசத்திற்கான அனுமதியினை பெறுவதில் தாமதம் ஏற்பட்டுவிட்டது. இருப்பினும் தற்போது அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது நான் நேரடியாக இந்த பிர தேசங்களை பார்வையிட்டுள் ளேன். வனவள திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டது போன்று அடர்ந்த காடுகள் இங்கு இல்லை அதனை புகைப்படமும் எடுத்துள்ளோம்.

,விரைவில் . நான் நேரில் பார்த்த நிலைமையினை புகைப்பட ஆதாரத்துடன் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு சென்று காணி வழங்குவதற்கான அனுமதியினைப் பெற்று காணியற்ற மக்களுக்கு அரச காணி சட்ட திட்டங்களுக்கு அமைவாக காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கிடையில் வீட்டுத்திட்டம் முடிவடைந்து விடும் என்ற அச்சம் மக்களுக்கு தேவையில்லை காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வீட்டுத்திட்டம் உள்ளிட்ட இந்தப் பிரதேசத்திற்கான வீதி, மின்சாரம், குடிநீர், உள்ளிட்ட உட்கட்டுமான பணிகளையும் மேற்கொண்டு இந்தப் பிரதேசத்தை ஒரு மாதிரி கிராமமாக மாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

இவ்விஜயத்தின் போது வடக்கு மாகாண சபை உறுப் பினர் வை.தவநாதன், பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கிராம அலுவலர் சத்திய நாதன், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சமய ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கல்வி அமைச்சில் சமய ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டதாரிப் பயிலுநர்கள், தேரர்கள் ஏனைய சமயத் தலைவர்கள் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகைமையாக க.பொ.த சாதாரண தரம், க.பொ.த. உயர் தரம் மற்றும் பட்டதாரிகள் சிறந்த பழக்க வழக்கங்கள், தேக ஆரோக்கியமுள்ளவர்களாகவும் வயது 21 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர் வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் பட்டதாரிப் பயிலுநர் பிக்கு மற்றும் சமயத் தலைவரை இலங்கை ஆசிரிய சேவையின் 3-1 தரத்திற்கு சேர்த்துக்கொள்ளல் என குறிப்பிட வேண்டுமெனவும் கேட்கப் பட்டுள்ளது. (105)

## கிளிநொச்சி...

(வயது-18) என்ற முருகானந்த வித்தியாலய உயர்தர கலைப் பிரிவு மாணவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

தருமபுரம் நெத்தலியாறுப் பகுதியில் யானை நிற்பதாக அறிந்த மாணவர்கள் 5 பேர் அங்கு சென்று யானையைப் பார்த்த போது, அவர்களைத் துரத்திய யானையிடம் குறிப்பிட்ட மாணவன் அகப்பட்டு தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளான்.

நண்பகல் 1.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ள போதிலும், மாலை 6.00 மணி வரை சடலத்தின் அருகிலேயே யானை இருந்துள்ளது. மாலை யில் பொலிஸார், இராணுவம், வன இலாகா அதிகாரிகளினால் யானை துரத்தப்பட்ட பின்னர் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தருமபுரம் கல்மடு, கட்டைக்காடு பிரதேசத்தில் சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவரையும் யானை தாக்கியதில் அவர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்மடு நகரைச் சேர்ந்த சோமசுந்தரம் சபாபதிப்பிள்ளை (வயது-64) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்தவராவார். (29)

## தமிழர் பிரச்சினையைத்...

ஜெனிவா கூட்டத்தொடரே சிறந்தது என்றும் அதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென்றும் கூறிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று ஜெனிவா தம்மை ஏமாற்றி விட்டதாக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

முன்னர் அபிவிருத்தியல்ல உரிமையே முக்கியம் என்ற வர்கள் தற்போது அபிவிருத்தியின் முக்கியத்துவம் குறித்து முன்னுக்குப் பின் முரணாக பேசி வருகின்றார்கள் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதனிடையே, இ.போ.ச வடபிராந்திய போக்குவரத்து சபையின் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்காக வேலைநிறுத் தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர், அது எமது மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அதேசமயம், அதன் மூலம் உரிய தீர்வினைக் காண வும் முடியாது என்றும் தெரிவித்தார்.

உங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதே எமது நோக்கம் என்பதுடன் மக்களுக்கான சேவையை நீங்கள் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது விருப்பமெனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதனிடையே யாழ்.சாலைக்கான வருவாயைப் பெருக்கி, நிதி வசதியை மேம்படுத்தி முன்னேற்றும் வகையில் யாழ்.சாலையினை அதன் சாலை முகாமையாளரிடம் தற்காலிகமாக ஒப்படைக்குமாறு இ.போ.ச. வின் வடபிராந்திய பிரதான பொது முகாமையாளர் அஸ்ஹரிடம் ஏற்கனவே பணிப்புரை விடுத்த அமைச்சர், அந்த நடவடிக்கையினை நேற்றைய தினமே ஆரம்பிக்குமாறும் கேட்டுக்கொண்ட அதே வேளை, இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இதைத் தொடர முடியுமெனவும் தெரிவித்தார்.

இதற்கு எல்லோரும் ஒத்து ழைப்பும், ஒத்தாசையும் வழங்க வேண்டுமென்பதுடன் சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, மத்திய பேருந்து நிலைய சுற்றுமதில் அமைப்பது, மலசலகூடங்கள், கழிவுநீர் வாய்க்கால்களின் புனரமைப்பு, மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் நடமாடும் வியாபார நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது, தனியார் பேருந்து நடத் துனர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் தமது கடமைகளை முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமைச்சர் அவதானம் செலுத்தினார்.

இதன்போது சாலை முகாமையாளர் குலபாலச்செல்வம், மத்திய பேருந்து நிலையத்தின் பொறுப்பதிகாரி மரியவிமல்ராஜ் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## மதில் சுவர்...

மணியளவில் பாலகன் புதிதாகக் கட்டப்பட்டிருந்த மதிலருகில் அமர்ந்திருந்து புதிய புகையிரதப் பாதை அமைப்புப் பணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். கனரக இயந்திரங்களின் அதிர்வுகளினால் பலமிழந்திருந்த மதில் சுவர் மீது சிறுவர்கள் ஏறிய போது அது இடிந்து பாலகன் மீது வீழ்ந்துள்ளது. இதனுள் அகப்பட்டு நசியுண்ட நிலையில் மீட்கப்பட்ட பாலகன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான். (இ)

## ஊஞ்சல்...

வரப்பட்டு மரணமானதாக முருங்கன் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சிறுமி கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வருபவர் ஆவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் முருங்கன் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## யுத்தக்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதனை இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

யுத்தம் சரியானதா இல்லை தவறானதா என்பதனை மக்களே தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இது குறித்து நிர்ணயிக்க முடியாது.

இலங்கை மக்கள் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்துமாறு கோரி யிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார். எனினும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடி பணியப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

## இலங்கைக்கு...

றும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாதிட்டுள்ளன.

பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, வெனிசுலா உள்ளிட்ட நாடுகள் இலங்கையை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளன.

போர் முடிந்து நான்கரை ஆண்டுகளாகியும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் எந்தவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்று தீர்மானத்துக்கு ஆதரவான நாடுகள் தெரிவித்தன.

ஆனால், இலங்கைக்கு இன்னும் காலஅவகாசம் கொடுக்க வேண்டும் என்று பாகிஸ்தான், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் வாதிட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில், இந்தியா தரப்பில் கீழ்நிலை அதிகாரி ஒருவரே பங்கேற்றிருந்தார்.

அவர், அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பாக எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில், இன்று மீண்டும், அமெரிக்கா தலைமையில் தீர்மானத்தை முன்வைத்துள்ள நாடுகளால், மற்றொரு முறைசாரா கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எட்டாவது இலக்க அறையில் இன்று காலை 10.00 மணி தொடக்கம், 12.00 மணி வரை இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை தொடர்பாக, இன்று மற்றொரு கலந்துரையாடலும் ஜெனிவாவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எல்லா வ்கையான பாகுபாடுகள் மற்றும் இனவாதத்துக்கு எதிரான அனைத்துலக அமைப்பினால் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் காலை 11.00 மணி தொடக்கம், மதியம் 1.00 மணி வரை 24 ஆவது அறையில் இந்தக் கலந்துரையாடல் நடக்கவுள்ளது.

## மானிப்பாயில்...

ஏற்பட்ட மின்னொழுக்கின் காரணமாகவே இத் தீ விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், தீ விபத்துக் குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நேற்று இரவு மேற்கொண்டிருந்தனர். (10)

## இராணுவ...

அமெரிக்காவின் கருவியாக இருக்கிறார். இந்த அறிக்கை வொஷிங்டனில் எழுதப்படலாம். இலங்கையைத் தனிமைப்படுத்தவே அமெரிக்கா முனைகிறது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## ஜெனிவா...

கிடைத்துள்ளது. அது கவனமாகப் பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

தேவைப்பட்டால், அங்குள்ள இந்திய அதிகாரிகள், முன்னைய சந்தர்ப்பங்களைப் போன்றே, இம்முறையும் கூட, தீர்மானத்தை முன்வைத்துள்ள அமெரிக்காவுடன் பேச்சு நடத்தலாம்.

முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களிலும், நாம் தீவிரமான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தோம்.

இந்த முறையும் கூட, எந்த வொரு பேச்சுக்களையும் பற்றிச் சிந்திக்க முன்னர், தீர்மான வரைவை கவனமாக ஆராய வேண்டியுள்ளது.

இது ஆரம்பக்கட்டம் என்பதால் வேறெதையும் சொல்ல முடியாது. அனுசரணை நாடுகளுடன் வரைவின் உள்ளடக்கம் குறித்து தீவிரமான பேச்சுக்களில் ஈடுபட முன்னர், தீர்மான வரைவு குறித்து ஆராய, இந்தியாவுக்கு இன்னும் கொஞ்சம் நேரம் தேவைப் படுகிறது.

முன்னர் தீர்மானத்தை இந் தியா நீர்த்துப் போகச் செய்யவில்லை.


ஆனால், செயற்படு பொறி முறைக்காக இந்தியா பணியாற்றியது.

இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்குமா என்று இப்போது கூற முடியாது.

எமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் காலம் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வேலூரில் விபத்து; இலங்கை அகதி பலி

(வேலூர்)



வேலூர் அருகே இடம் பெற்ற விபத்தில் இலங்கை அகதி துடிதுடித்து உயிரிழந்தார். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வேலூர் அருகே கீழ்மொணவூரில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் எதிரில் தனியார் தோல் தொழிற்சாலை உள்ளது. இங்கு காலணிகள் உட்பட பல்வேறு பொருட்கள் தயார செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் வெளியூரில் இருந்து தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரம் வந்தது. இதனை தொழிற்சாலைக்கு உள்ளே எடுத்துச் செல்வதற்காக அருகில் உள்ள இலங்கை அகதி முகாமில் இருந்து 2 பேரை அழைத்தனர். அதன் படி அங்கிருந்த முருகய்யா (வயது - 48) மற்றும் ஒருவர் அங்கு வந்தனர்.

அதைத்தொடர்ந்து அந்த இயந்திரத்தை கிரேன் மூலம் உள்ளே எடுத்து செல்லும் போது திடீரென கிரேனின் கம்பி வடம் அறுந்தது. இதில் எந்திரம் முருகய்யா மேல் விழுந்து நசுக்கியது. சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபமாக இறந்தார்.

# கடற்படையினர் வசமுள்ள காணிகளை மீளத்தரக்கோரி வீதி மறியல் போர்

(மன்னார்)



மன்னார் மாவட்டம் முசலி பிரதேசத்தில் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள மறிச்சுக்கட்டி, மரைக்கார்தீவு கிராம மக்களுக்குச் சொந்தமான விவசாய காணிகளைத் திருப்பித் தரவேண்டும் எனவும், மீள்குடியேறியுள்ள காணியற்ற குடும்பங்களுக்குக் காணிகள் வழங்க வேண்டும் எனவும் கோரி வீதி மறியல் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தினால், முருங்கன், சிலாவத்துறை, மறிச்சுக்கட்டி ஊடான மன்னாருக்கும் கற்பிட்டிக்கும் இடையிலான பிரதான வீதியூடான வாகனப் போக்குவரத்துகள் நண்பகல் முதல் நான்கு மணித்தியாலங்கள் தடைப்பட்டன.

கடந்த 1990 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்டதையடுத்து, இடம்பெயர்ந்து சென்று 2010 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் மீள்குடியேறிய இந்தக் கிராமங்களின் வயல் காணிகளின் ஒரு பகுதியைக் கடற்படையினர் படை முகாம் அமைப்பதற்காக கையகப்படுத்தியிருந்தனர்.

இதனால் இந்த மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கான விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

அத்துடன், இடம்பெயர்ந்திருந்த இருபது வருட காலத்தில் அதிகரித்துள்ள குடும்பங்கள் குடியேறுவதற்கு போதிய காணிகள் இல்லாத நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

கையகப்படுத்தப்பட்ட விவசாய காணிகளைத் தரவேண்டும், காணியற்ற குடும்பங்கள் குடியேறுவதற்கு காணிகள் வழங்கப்பட வேண்டும் என்பது போன்ற தமது நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத காரணத்தினாலேயே இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக மரைக்கார்தீவு கிராம மக்களின் தலைவர் மௌலவி மஹ்முத் தௌபீக் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த சிலாவத்துறை பொலிஸார் தடைசெய்யப்பட்டிருந்த வீதியைத் திறப்பதற்கான பேச்சுக்களை ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நடத்தினர்.

ஆயினும் உரிய அதிகாரிகள் நேரடியாக வந்து கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் வீதி மறிப்புப் போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து கலகம் அடக்கும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அங்கு வருகை தந்த முசலி பிரதேச சபைத் தலைவர் டபிள்யு.எம். எஹியான், அமைச்சர் ரிசாட் பதியுதீனின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும், இன்று அவருடைய தலைமையில் கூடிப்பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என உறுதியளித்ததையடுத்து வாகன போக்குவரத்துக்கள் அனுமதிக்கப்பட்டன.

எனினும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையில் தமது போராட்டம் அமைதியான முறையில் இன்றும் தொடரும் என்று மௌலவி தௌபீக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# ஆளும் கட்சி கடும் போக்காளர் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம்

## பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க கவலை

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கடும்போக்குவாதிகள் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்துவதில் திடசங்கற்பம் பூண்டு செயற்பட்டு வருவதாக ஆளும் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் படையினரது நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில கடும்போக்குவாத கட்சிகள் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கடும்போக்குடைய சக்திகள் வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கைகளின் மீதும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். சில முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு கடும்போக்குடைய கட்சிகள் தடையை ஏற்படுத்தி வருகின்றமை வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# ரணில் இருக்கும் வரை ஐ.தே.க.விற்கு விடிவில்லை

## என்கிறார் அமைச்சர் ராஜித

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்ரமசிங்க இருக்கும் வரை அந்தக்கட்சிக்கு விடிவு ஏற்படப் போவதில்லை. அத்துடன் தமது அமைச்சுப் பதவிக்கும் எந்த ஆபத்தும் ஏற்படாது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் வெற்றி பற்றி பேசுவதற்கு எதுவுமில்லை. தேர்தலில் வெல்லப் போவது அரசாங்கம் என்பது தெளிவானது. இதனால் இம்முறை தூக்கம் விழித்து தேர்தல் முடிவுகளைப் பார்க்க வேண்டியதில்லை.

காலையில் நாம் விரும்பிய வருக்கு எத்தனை விருப்பு வாக்குகள் கிடைத்தன என்பதை அறிந்து கொண்டால் போதும்.

ரணில் இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு விடிவு ஏற்படப் போவதில்லை. அது எமக்கு நல்லது. ரணில் இருக்கும் வரை எம்மால் பல காலத்திற்கு அமைச்சராக இருக்க முடியும்.

ஜனாதிபதியும் நீண்டகாலம் ஆட்சியில் இருந்து விட்டு தமது பிள்ளைகளுக்கு அந்தப் பொறுப்பை வழங்க முடியும்.

ஜனாதிபதியின் பிள்ளைகள் அவர்களின் பிள்ளைகளுக்கு ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க முடியும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்டுள்ளார்.

# பரீட்சைகள் திணைக்களத்தால் வெளிவாரி பட்டப் பரீட்சை

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிவாரி பட்டப் படிப்புகள் சம்பந்தமான பரீட்சைகள் எதிர்வரும் காலங்களில் பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக நடத்தப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ். பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பின் தரத்தை உயர்த்தும் நோக்கில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்த குழு வழங்கிய பரிந்துரைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களே பரீட்சை வினாத்தாள்களை தயார் செய்து வினாத்தாள்களை திருத்தி வழங்கும் புள்ளிகளுக்கு அமைய பட்டங்கள் வழங்கப்பட்டு வந்தன.

இதனால் வெளிவாரியாக மேற்கொள்ளும் பட்டப்படிப்பு தரமற்ற நிலைக்கு மாறியது. இப்படியான பட்டதாரிகளை நாட்டில் உருவாக்கும் தேவையில்லை.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் அறிவுசார்ந்த நபர்களை உருவாக்குவதே நோக்கம் எனவும் வெளிவாரி பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கும் சகலரும் பதிவு செய்யப்படுவார்கள் எனவும் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலேயே பட்டங்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# நீர் மின் உற்பத்தி 18 சதவீதத்தால் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற வறட்சி காரணமாக, நீர்மின் உற்பத்தி 18 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் இதுவரையில் மழைவீழ்ச்சி பதிவாகவில்லை என இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான செனஜித் தசநாயக தெரிவித்துள்ளார்.

அனல் மின் உற்பத்தி நிலையங்களில் அதிகபடியான மின் உற்பத்தி மேற்கொள்வதால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறும் மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரதேச செய்தியாளர் காலமானார்

தினமுரசு நாளிதழின் வடமராட்சி கிழக்கு செய்தியாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லோஸ் (வயது - 71) சுகயீனம் காரணமாக நேற்று காலமானார்.

1965 ஆம் ஆண்டு பத்திரிகைகளுக்கான பிரதேச செய்தியாளராக கடமையாற்றத்தொடங்கிய இவர் தற்போது தினமுரசு உட்பட பல்வேறு நாளிதழ்களுக்கு பிரதேச செய்தியாளராக கடமையாற்றியிருந்தார்.

இவரது இறுதிப்பிரார்த்தனை தாளையடி அந்தோனியார் ஆலயத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

# இந்திய நலனுக்காகவே விடுதலைப்புலிகள் உருவாக்கம்

## ராம் ஜெத்மலானி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி உருவாக்கினார் என்று இந்தியாவின் முன்னாள் சட்ட அமைச்சரும், பிரபல சட்ட நிபுணருமான ராம்ஜெத்மலானி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ள அவர், 1987 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இந்திய - இலங்கை அமைதி உடன்பாடு, இந்தியாவின் நலனுக்குச் செய்யப்பட்ட மிகப் பெரிய துரோகமாகும். அவர்கள் எமது சொந்த முகவர்களான றோவினால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்.

இலங்கையில் சீனர்களும் பாகிஸ்தானியர்களும் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்ற போது, இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதற்கு இலங்கைக்குள் சில சக்திகள் இந்திரா காந்திக்கு தேவைப்பட்டன.

ராஜீவ்காந்தியே இந்திய நலனுக்குத் துரோகமிழைத்தார். போபர்ஸ் ஊழலில் சிக்கியிருந்த போது தான், அவர் நரித்தந்திரம் கொண்ட இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் உடன்பாடு செய்து கொண்டார்.

இந்திய - இலங்கை உடன்பாட்டை செய்து கொண்டதன் மூலம் அவர் இந்திய நலனுக்கு மிகப்பெரிய துரோகம் செய்து விட்டதாக நான் நினைக்கிறேன்.

அரசாங்க விருந்தினர்களாக கௌரவிக்கப்பட்டவர்கள், பயிற்சியும், நிதியுதவியும் அளிக்கப்பட்டவர்களை, கொல்வதற்காகவே இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது மிகப்பெரிய நம்பிக்கைத் துரோகம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.